# ரேஷன் காலம்

"கே. ஸ்ரீ"

LIBRARY

பேசும் படம் காரியாலயம்
சென்னை 14

முதற்பதிப்பு: டிசம்பர் 1946

24456

விலை

Printed at Ramanath Press, 188, Royapettah High Road, Madras 14.
P. I. Card Q. H. No. MS 458 For Pesum Padam P. I. Card
Q. H. No. MS. 33.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

## ரேஷன் காலத்தில்.....

1. விருந்தாளி
2. பள்ளிக்கூட உபாத்தியாயர்
3. காகிதச் சிக்கனம்
4. ஓட்டுக் குடித்தனம்
5. குமாஸ்தா கந்தசாமி
6. பிரயாணம்

எமது வெளியீடுகள்

1. நட்சத்திர மாலை 1 ரூ. 2 0 0
"குண்டூசி"

2. நட்சத்திர மாலை 2 ,, 2 0 0
"குண்டூசி"

3. ராஜா ஸாண்டோ ,, 2 0 0
"ராமநாத்"

4. பதிவிரதை—*சினிமா நவீனம்* ,, 1 8 0
"கே. ஸ்ரீ."

5. மின்மினி—*சினிமா நவீனம்* ,, 1 8 0
"சிரஞ்சீவி"

# விருந்தாளி

## காட்சி 1

சாமா: (உரக்க) மன்னார்! டேய் மன்னார்!........நானும் பார்க்கறேன். காலங்காத்தாலே கண்ணிலேயே அகப்பட மாட்டேங்கறான். கத்திக் கத்தி தொண்டை கட்டிண்டதுதான் மிச்சம். இவனுக்கோசரம் மணிக்கு மணி காப்பி சாப்பிட முடியறதா?........ அந்தக் காலமா?

கோமதி: ஏன் இப்படி கூச்சல் போடறேள்?

சா: வாம்மா, கோமதி, வா. நீ ஒத்திதான் பாக்கி. (கோபமாக) அந்தப் பயல் எங்கே?

கோ: யாரு?

சா: மன்னார்தான்.

கோ: நான் ஒண்ணும் அவனை ஒளிய வச்சிண்டிருக்கல்லே.

சா: ஒளிய வேறு வெக்கணுமா? எங்கேயாவது அவனை ஓட ஓட விரட்டியிருப்பே?

கோ: நானா அவனை விரட்டறேன். அவன் என்னை விரட்டாம இருந்தாப் போறுதா?

சா: எல்லாம் நீ கொடுத்த இடம்தான்.

கோ: இதோ பாருங்கோ. அவன் சாமர்த்தியத்தினாலே தான் இந்தக் குடும்பம் நடக்கறது, ஆமாம்.

சா: அவன் சாமர்த்தியமா? நெட்டி முறிய ஆபீஸ்லே வேலை செஞ்சுட்டு மாசாமாசம் நூத்தி ஐம்பது ரூபாயை கலகலன்னு கொண்டு வந்து கொட்டறேன்.

அவன் நடத்தரூனும், சாமர்த்தியமா! பேச்சைப் பாரு.

கோ: உங்க பேச்சுதான் கலகலப்பா இருக்கு. ஒரு சாமானை வாங்கிண்டு வர உங்களுக்கு ஏதாவது சாமர்த்தியமிருக்கா?

சா: பேஷ், பேஷ்! கோமதி, நன்னுச் சொன்னே. இந்த உத்தியோகத்தை ராஜிநாமா பண்ணிப்புட்டு மன்னு ரோடே போட்டி போடச் சொல்றயா?

கோ: ஏதாவது வார்த்தை சொன்னு, அனர்த்தம் பண்ணத்தான் தெரியும்.

சா: சரி, அவனை எங்கே அனுப்பிச்சிருக்கே?

கோ: நான் ஒண்ணும் அனுப்பல்லே....அவனு, பொருப்பா பைகளை எடுத்துண்டு கடைக்குப் போயிருக்கான். நம்ப சொல்லணம்னு அவன் வச்சுண்டாத்தானே?

சா: அவன் காது கேட்க சொல்லிப்புடு. உச்சி குளிர்ந்து போய்டும். அவன் தலைகீழா நிப்பான்.

கோ: ஏன் அவனைக் கண்டா உங்களுக்கு பிடிக்காம போய்டுத்து?

சா: எல்லாம் உன்னுலேதான். அவனவனை வைக்கற இ ட த் தி லே வச்சிண்டாத்தான், சகலத்துக்கும் நல்லது.

கோ: அவன் எப்போதும் வாசல்லேயே தான் இருக்கான்.

சா: அதுதான் சௌகரியமான இடம், சொல்லிக்காம நழுவிடறதுக்கு. வேறு இடம் இத்தனை சுலபமா அகப்படுமா?

கோ: அவனுலே எத்தனை உபகாரம் தெரியுமா? எள்ளுங் ரத்துக்குள்ளே, எண்ணெயை கொண்டு வந்துடறுன்.

சா: போன ஜன்மத்திலே செக்காறு பிறந்திருப்பான்.

கோ: பிறத்தியாரைப் பழிக்கறதுன்னு ரெடி—ஒரு காரியம் உங்களாலே ஆகாட்டாக் கூட. பணம் எத்தனை வந்தாலும் போறல்லே. ஒரு சாமானை வாங்கி உள்ளே வைக்கறதுக்குள்ளே ஆய்போய்ட்றது.

சா: நான் மாசம் பதினைஞ்சு ரூபாய் சம்பாதிக்கச்சேயும் இதைத்தான் சொன்னே. இப்போ நூத்தி ஐம்பது ரூபாய் கொண்டு வரச்சேயும் அதே பல்லவி!

கோ: அப்போ ஆரோகணம். இப்போ அவரோகணம்.

சா: காலம் அப்படி. எத்தனை வந்தாலும் போறல்லே. இருக்கறதை வச்சுண்டுதான் சமாளிக்கணும்.

கோ: நான், என்ன, இல்லாத்தைக் கொண்டா, கல்லாலடிப் பேங்கறேனு?

சா: மன்னார்தான் இருக்கானே?

கோ: அதோ மன்னாரே வந்துட்டான். ஆய்சு நூறுடா உனக்கு.

சா: அவன் சிரஞ்சீவியா இருக்கட்டும்! நான் கொடுத்த வேலையைத் தட்டாம செஞ்சுண்டிருந்தான்னு சரி. எனக்கு வேண்டியது அவ்வளவுதானே?

மன்னார்: (முணகிக்கொண்டே) அப்பா!....அம்மா! உயிர் போவுதுங்க.

கோ: வாடாப்பா, மன்னார். பாவம் இத்தனையையும் நீ ஒருத்தனு தூக்கிண்டு வந்திருக்கயே! குவளையிலே காப்பித்தண்ணி கொட்டி வச்சிருக்கேன். போய் குடிச்சூட்டு வா.

மன்: (போய்க்கொண்டே) சரிங்கம்மா.

சா: கோமதி, இது என்ன வீடா, சத்திரமா, குவளை நிறைய காப்பியா? ஏதோ தவலை நிறைய வெந்நீர் இருக்குன்னு சொல்ல வந்தயோன்னு நினைச்சேன்.

கோ: அவன் செய்ற காரியத்துக்கு, காப்பி மட்டுமா தரணும்?

சா: கோக்கோ ஆம்படலயேன்னு வருத்தப்படறயோ? இதோ பார், கோமதி, இது நடக்கற குடும்பமா இல்லே.

கோ: நீங்க பேசாம உங்க காரியத்தைப் பாருங்கோ. உங்க விஷயத்திலே நான் தலையிடறேனா?

மன்: (வந்துகொண்டே) அடாடா, என்ன கஷ்டம் போங்கம்மா! என்ன கஷ்டம். கால் கை எல்லாம் வீங்கிப்போச்சுங்க. ரேஷன் கடையிலே அதிகாலை யிலேர்ந்தில்லே நிக்கறுங்க. கூட்டத்தைப் பாத்தா, திருவிழா மாதிரி இருக்குது.

கோ: ஆமாண்டாப்பா! என்ன செய்யறது? காலம் அப்படி!

மன்: என்னம்மா! சின்ன வயசிலே தண்டாலு, பஸ்கி எல்லாம் எடுத்து, பயில்வான் வேலை கத்துக்கிட்ட தெல்லாம் ரொம்ப பயன்படுதுங்க.

சா: ஏண்டா மன்னார், ரேஷன் வாங்கிண்டு வர இத்தனை நேரமா?

மன்: முதுகெல்லாம் வலிக்குதுங்க.

சா: ஏண்டா, மன்னார், நான் சொல்றது காதிலே விழல்லே?

கோ: மன்னார், நீ தோட்டத்துக்குப் போடா. வேலை தலைக்குமேலே இருக்கு....அவர் அப்படித்தான் ஏதா வது....

சா : ஏண்டா, நான் நிக்கறது மனுஷனுத் தெரியல்லே ?

மன் : அவரு சொல்லிட்டுப் போகட்டுங்க (போய்க் கொண்டே) அருமை தெரிஞ்ச ஆளாயிருந்தா இப்ப டிப் பேசுவாரா ?

சதாசிவம் : (வந்து கொண்டே) சாமா ! சாமா !

சா : அப்பா ! கூட்டேளா ?

சதா : ஆமாண்டாப்பா. லெட்டர் வந்திருக்கு.

சா : யார் போட்டிருக்கா ?

சதா : ரமணி போட்டிருக்கான்.

சா : எந்த ரமணி ?

சதா : அதாண்டா, நம்ப ரமணி ! நம்ப கிராமத்திலே பக் கத்து வீட்டிலே இல்லே ?

சா : அவரா ? என்ன எழுதியிருக்கார் ?

சதா : நாளைக்கு இங்கு வாராளும். லீடியிலே ஒரு மாசம் இருக்கணம்னு ஆசையாயிருக்காம்.

சா : எதுக்காக ?

சதா : நம்ப வீட்லேதான் வந்திருக்கணம்.

சா : அந்தக் காலமாயிருந்தா பரவாயில்லே. இப்போ நமக்கே போறல்லயே.

சதா : நானும் ரமணியும் ரொம்ப ஸ்நேகிதம். பால்யத் திலே ரொம்ப பழகிட்டோம். ஊர்லே ஒரு புளிய மரம் பாக்கியில்லாம ரமணி ஏறிடுவான்.

சா : லீடியிலே புளியமரம் ஏது ?

சதா : அடே ! அந்தக் காலத்திலே அவன் அப்படிச் செய் தான். ஒரு வார்த்தைக்குச் சொல்ல வறேன்.

சா: நம்ப வீட்டிலே ஒரு மாசம் இருக்க முடியுமா? ஒரு வாரத்துக்குமேலே இருந்தா தனியா ரேஷன் கார்டு வாங்கணுமே!

சதா: இதோ பார், சாமா! சமாசாரம் இரகசியமா இருக்கட்டும். ரமணிக்கோ தள்ளாத வயசு. அவன் கையிலே பத்தாயிரம் ரூபாய் இருக்கு. ஆமாம், பத்தாயிரம் அவனே சம்பாதிச்சது. அவனுக்கு வாரிசில்லே. என் மேலே அவனுக்கு உசிர். இங்கேயே அவனை இருக்கும்படி செய்தா, ஒரு வேளை அவனுதை எல்லாம் நமக்குக் கொடுத்தாலும் கொடுத்துடுவான்.

சா: எனக்கு ஒண்ணும் ஆக்ஷேபணையில்லை. காலம் சரியாயில்லையேன்னுதான் பாக்கறேன்.

சதா: என்ன செய்யறது? கொஞ்சம் கஷ்டம்தான். அதுக்கோசரம் பால்ய ஸ்நேகிதத்தை விட்டுடறதா? போறுததுக்கு அவன் கிட்டே பணையிருக்கு. எல்லாம் ஒட்டிண்டிருந்தாத்தான். என்ன, ஸ்பெஷல் ரேஷன்ஸுக்கு சீக்கிரம் ஏற்பாடுபண்ணு, ஆமாம்.

சா: கோமதி சம்மதம்....

சதா: எல்லாம் நீ அடிச்சுப் பேசிறைப்போறது. அவளைக் கண்டவுடனே கையைப் பிசிஞ்சுண்டு நிக்காம, சாமர்த்தியமாப் பேசு.

சா: அவளைப் பத்திக்கூட எனக்கு பயமில்லே.

சதா: பின்னே?

சா: அவ துன்மந்திரி ஒருத்தன் இருக்கானே? எனக்குன்னு, எங்கேர்ந்துதான் வந்தானோ?

சதா: மன்றைா? வேலைக்காரனுக்கு இத்தனை நடுங்கறயே?....(பெருமூச்சு விட்டு) அதெல்லாம் நினைச்சா

நடந்ததான்னு கூட தோன்றது. உங்க அம்மாவுக்கு என்னைக்கண்டா சிம்ம சொப்பனம்னு சிம்ம சொப்பனம்தான். 'சதாசிவம்'னு என் பேரைக் கேட்டாலே, ஊரிலே ஒவ்வொருத்தரும் நடுங்குவா. எல்லாம் அது ஒரு காலம்.

சா: சரிப்பா!

சதா: சாமர்த்தியமா நடந்துக்கோ. (போகிறார்)

கோ: (வந்துகொண்டே) என்ன பிள்ளைக்கு உத்தரவு போட்டுட்டுப் போறாரே பெரியவர்.

சா: அதுக்கென்ன குறைச்சல்? அவர் உத்திரவு, நீ செய்ற ரகளை, மன்னார் பண்ற தடபுடல்—எனக்கு இந்த யோகமாவது பலமாயிருக்கே?

கோ: வேணும்னு உங்க தர்பாரை நடத்தித்தான் பாருங்களேன்.

சா: உத்தரவு போட்டுட்டாப் போதுமா? அதுக்கு நடத்தை கௌரவம் வேண்டாமா?

கோ: உங்களோட வீண் பொழுது போக்க எனக்கு நேரமில்லை. எனக்கு ஊர்ப்பட்ட வேலையிருக்கு.

சா: கோமதி, ரொம்ப அவசரமோ?

கோ: சுருக்கமா சொல்றதா இருந்தா கேட்டுட்டுப் போறேன்.

சா: ஹூம்........

கோ: வார்த்தையை மென்னு முழுங்கிறு?

சா: அப்பாவோடே........

கோ: சொல்றதை சீக்கிரமா சொல்லுங்களேன்.

சா: அப்பாவோடே ஸ்னேகிதர் ஒருத்தர் இருக்கார். ரமணின்னு பேரு.

கோ: அவருக்கென்னவாம்?

சா: ஒண்ணுமில்லே. அவருக்கு அப்பாவைப் பார்க்க ணம்னு ரொம்ப ஆசையா யிருக்காம்.

கோ: அப்பாடா! இதுக்கா இத்தனை தடபுடலும்! நன்னா வந்து பாக்கட்டுமே! நான் என்ன தடுக்கறேனா? மத்தியானம் பூரா வந்து அரட்டை அடிக்கறவாளை என்னாலே தடுக்க முடியறதோ? அவா போட்ற சப் தத்திலே, பாவம், மன்னாருக்கு ஒரு நிமிஷம் கூட தூங்க நேரம் ஆம்படறதில்லே.

சா: மத்த சமயத்திலே எல்லாம் அவன் செய்றதுக்கு என்னன்னு பேரோ?

கோ: அவா போட்ற கூச்சல் ஒரு பெரிசா தோணலே பாருங்கோ.

சா: அந்த ரமணி நம்ப வீட்லே வந்து இருக்கப்போறதாக எழுதி யிருக்கார்.

கோ: என்ன? நம்ம இருக்கற லக்ஷணத்துக்கு விருந் தாளி வேறு?

சா: நான் என்ன வெத்தலே பாக்கு வச்சா வருந்தி வருந்தி அழைக்கறேன்? வரவாளை வந்ததும் வராததுமா கழுத்தைப் பிடிச்சு வெளியிலே தள்ளறதா?

கோ: இல்லே! வீட்டோடு வச்சுண்டு, தினம் சமாரா தனை பண்ணுங்கோ.

சா: ஏதோ! நமக்கிருக்கிறதை அவாளுக்கும் போட் டுட்டு இருக்க வேண்டியதுதான்.

கோ : உங்களுக்கு என்ன ? பேசுவேள். கடைசியிலே என் பிராணன்னு போகும்.

சா : அசட்டுப் பிசட்டுன்னு பேசாதே. இதுக்கெல்லாம் பிராணனை விட்டுட்டா ?

கோ : உங்களுக்கென்ன ? ஈசிசேர்லே உட்கார்ந்துண்டு, உத்தரவுக்கு மேலே உத்தரவு போட்டுண்டே இருப்பேள். அதுவும் யாரையாவது புதுசா கண்டுட்டா, உங்களுக்குத்தான் தலைகால் புரியாதே.

சா : அதுக்காக என்ன செய்யச் சொல்றே ?

கோ : வாசல்லே, 'இது ஒரு சத்திரம்'னு போர்டை உடனே போடச் சொல்றேன். அந்தக் காலமா, பரவாயில்லேங்கரத்துக்கு. ஒண்ணும் போறவே யில்லை. போறாத காலத்துக்கு விருந்தாளி வேறயா ?

சா : இது எல்லாம் என் போறாத காலம்.

கோ : உங்களோட வாதாட எனக்கு நேரமில்லே. நமக்கே சாமான் எல்லாம் போறுமோ போறாதோன்னு இழுத்துப் பறிச்சிண்டிருக்கு. அப்புறம் உங்க சாமர்த்தியம்.

சா : கோமதி, நான் உனக்கு எத்தனை சொன்னாலும் புரியப் போறதில்லே. நான் சொல்றபடி செய்.

கோ : எனக்கென்ன ? இருந்தாப் போட்றேன். இல்லாட்டா இருக்கவே இருக்கு.

## காட்சி 2

(வண்டி வரும் சப்தம்)

சதா : வாப்பா, ரமணி, வா. உன்னைப்பாத்து ஒரு யுகம் ஆனாப்போலே இருக்கு.

சா: வாங்கோ, மாமா, வாங்கோ. உங்களைப் பார்க்கணும்னு அப்பா துடியாதுடிச்சிண்டிருக்கார்.

ரம: என்ன சதாசிவம்! சௌக்கியமா?

சதா: ஏதோ இருக்கேம்பா.

ரம: அடே, அம்பிப்பயலா இப்படி வளர்ந்துட்டான்? ஹேம்! அப்போ எல்லாம் இத்தனூண்டு பயலா இருப்பான். அவன் இருக்கிற இடமே தெரியாதே?

சதா: நீ அவனைப்பாத்து பத்து வருஷம் ஆகல்லையா?

ரம: ரொம்ப நாளா பாக்கணும்னு ஆசை. இப்போதான் அதுக்கும் காலம் வந்தது.

சதா: ரமணி, இன்னும் காப்பி சாப்பிடல்லயே?

சா: இதோ நானே உள்ளே போய் கொண்டு வறேன்.

சதா: என்னப்பா! இந்தப்பக்கமே நீ வரல்லே? எங்களை எல்லாம் மறந்துட்டயா?

ரம: சே, சே, உன்னை எல்லாம் மறக்க முடியுமா?

சதா: என்ன ரமணி! அதை எல்லாம் விட்டுட்டயா?

ரம: எதை?

சதா: புளியமரத்திலே ஏறி, கிளைக்குக் கிளை தாவுவயே?

ரம: ஏண்டா, உனக்கு இத்தனை வயசு ஆகியும், அசட்டுப் பிசட்டுண்ணு பேசறது, இன்னமும் போகல்லே பாத்தியா?

சதா: விளையாட்டா கேட்டேம்பா.

ரம: நல்ல விளையாட்டு? உன் பிள்ளை காதிலே விழுந்தா, அவன் என்ன நினைப்பான்?

சா : (வந்து கொண்டே) மாமா, இதை முதல்லே சாப் பிடுங்கோ.

ரம : இது உன்ன கஷாயமா ?

சதா : என்ன, ரமணி அப்படிச் சொல்றே ?

ரம : இல்லே, பாக்கறதுக்கு....

சா : சக்கரை போறல்லே. காப்பியிலே வெல்லம் போட் டுத்தான் சாப்பிட வேண்டியிருக்கு.

ரம : ஏன் ?

சதா : அகப்படறது தானே ?

சா : வெல்லம் உடம்புக்கு நல்லது, மாமா.

ரம : கைக்கு அகப்படறது நல்லதுதான்.

சா : சாப்பிடுங்கோ. ஆறிப்போயிடும்.

ரம : இதோ, எப்படியாவது சாப்பிட்டுட்றேன்.

சா : மாமா, குளிச்சூடுங்களேன்.

ரம : நானே சொல்லணும்னு இருந்தேன். டிரெயின்லே வந்தேனு ? குளிச்சாத்தான் உடம்புக்கும் கசகசப்பு போகும். (தாமதம்)

சா : அப்பா ! மாமாவைக் கூப்பிடலாம்.

சதா : வாப்பா, ரமணி, சாப்பிட வா.

ரம : இதோ வந்தூட்டேன்........என்ன கறிகாய் எல்லாம் பச்சை • பச்சையா இலையிலே திருத்திப் போட் டிருக்கே ?

சா : ஆமாம். இதுதான் நல்லது.

ரம : என்ன ? சமயல் பண்ற சிரமம் மிச்சங்கறயோ ?

சா: இல்லே. கொதிக்க வச்சா இதிலே இருக்கற சத்தெல்லாம் குறைஞ்சு போய்ட்றது. அப்படியே நறுக்கிப் போட்டு வேகவக்காம சாப்பிட்டா, உடம்புக்கு எத்தனை ஆரோக்யம்?

ரம: தெரியாது, தெரியாது, கண்ணுக்கு முன்னாலேயே தெரியாது. சிரமும் மிச்சம், விறகும் மிச்சம்.

சா: பெரியவா எல்லாம் காய் கறிகளை பச்சை பச்சையா சாப்பிட்டு வந்ததிலே, ஒரு பெரிய உண்மை இருக்கு.

ரம: இதை அறியறதுக்கு நமக்கு இத்தனை வருஷம் ஆச்சு பார்? அதிலேதான் இருக்கு ஆச்சரியம்.

சா: உங்களுக்கு சாப்பிட நன்னாயிருக்கா?

ரம: அத்தனை வித்தியாசம் தெரியல்லே.

சா: ஏன் சாப்பிடுங்கோளேன்? சாதம் கொஞ்சமாப் போட்டிருக்கேன்னு பாக்கறேளா?

ரம: சாப்பிட சாப்பிடத்தானே போடணும்.

சதா: சாமா, அதைக்கொண்டு வந்து போடச்சொல்லு.

சா: அதோ அவளே கொண்டு வந்துட்டா.

சதா: ரமணி, சங்கோஜப்படாதே. உனக்கு எப்போதுமே திரிசமன் அதிகம். உங்க வீடு மாதிரி நினைச்சுக்கோ. நீ எதையும் கேட்டு சாப்பிடலாம்.

ரம: அதுக்கென்ன?........ம்........என்ன இது?

சா: சப்பாத்தி.

ரம: ஊம், என்ன பாத்தி?

சா: சப்பாத்தி.

ரம: இலையிலே வேகாத கறிவந்து விழறுப்பிலே, இந்த சப்பாத்தியும் பச்சையா வந்து விழுமோன்னு நினைச்சேன்.

சா: கோதுமை மாவாலே பண்ணின ரொட்டி. உடம்புக்கு ரொம்ப நல்லது. இப்போ இதைத்தானே நாங்க சாப்பிடறோம்.

சதா: சாப்பிடாம வேறு வழி. சின்ன வயசிலேர்ந்து புளங்காய் உண்டை, முறுக்கு, இது எல்லாம் சாப்பிட கத்துண்டது இப்போ எத்தனை உதவியாயிருக்குத் தெரியுமா, ரமணி!

ரம: எனக்கென்னமோ எல்லாம் நம்பவே முடியல்லே. பெரியவாள் சொல்லித்தான் கேள்வி. இப்போ நமக்கே வந்துடுத்து இதெல்லாம்.

சா: அதுக்கில்லே மாமா, பொதுவா எல்லாருக்கும் உள்ளதுதானே நமக்கும். அகப்படறதை வச்சுண்டு தானே, காலம் தள்ளணம்?

ரம: அந்தக் காலமா?

சா: அதுவும் கோதுமையாலே உடம்புக்கு போஷணை அதிகம். சாப்பிட்டா நல்லதுதானே?

சதா: என்ன ரமணி, சப்பாத்தி பிடிக்கறதா?

ரம: பிடிக்கறது, பிடிக்கறது.

சதா: என்ன? என்ன? ரமணி!....சாமா, ரமணி அப்படி முழிச்சுப் பாக்கறானே?

சா: ஜலம் குடிங்கோ, சீக்கிரம், சீக்கிரம்.

சதா: இப்போ எப்படியிருக்கு, தேவல்லையா?

ரம : ஏதோ உள்ளே போய்டுத்து.

சா : எல்லாம் பழகிண்டா சரியாய்ப் போய்டும்.

ரம : சப்பாத்தி சாப்பிடறதுக்கு முன்னாலே, உயிரை விட்டுட்றதுக்கு பழகிக்கணும் போலிருக்கே.

சா : ஏன் மாமா, இத்தனை பேரும் சாப்பிடல்லையா ? எங்க வீட்டிலே குழந்தைகள் சப்பாத்தி போட்டாத்தான் சாப்பிடுவோம்னு பிடிவாதம் பண்றதுகள்.

ரம : அதெல்லாம் பழக்கம்.

சா : நம்ப குழந்தைகளாவது நல்ல முறையிலே வளரட்டுமே. சத்தும் அதிகம். விலையும் குறைச்சல். நம் தேவைக்கு வேண்டியது அகப்பட்றது.

ரம : அது சரி! இதோடே கோந்து போட்டுத் தட்றதா ?

சா : கோந்தா! நன்னாக் கேட்டேள்? இது கோதுமை மாவிலேந்துன்னா பண்றது. கிராமத்திலே உட்கார்ந்துண்டு, சக்கரையாப் பேசினா போறுமா?

ரம : சக்கரையாவா ? இனிமே வெல்லம்னு சொல்லு.

சா : போறாது போறாதுன்னு கத்தீட்டாப் போதுமா ? அதுக்கு விமோசனம் தேடணும். ஏதாவது பரிகாரம் கண்டு பிடிக்கணும்.

ரம : இந்த சப்பாத்தி, அரிசிக்கு சரியான பரிவர்த்தனை.

சா : கோமதி கிட்டே சொல்லி, இன்னும் ரெண்டு சப்பாத்தி இலையிலே போடச் சொல்லு.

ரம : என்ன ? என்ன ? இன்னமுமா ?

சதா : ரெண்டு தாம்பா, போட்டுக்கோ.

ரம : அப்பா ! அப்பா ! என்னை விட்டுடு. உனக்கு கோடி புண்ணியம் உண்டு.

சதா : பரவாயில்லே. ரெண்டே ரெண்டுதான். அப்புறம் உன்னை தொந்தரவு செய்யமாட்டேன்.

ரம : என்னை விட்டுடுங்கோ. என்னை விட்டுடுங்கோ. நான் ஏதோ........நான் ஏதோ........

சா : என்ன மாமா! இதிலே இருக்கற விட்டமின்........

ரம : கடவுளே ! கடவுளே ! காதாலே கேட்க முடியல்லையே !

சா : இது சாப்பாட்டிலே இருக்கிற உயர்ந்த சத்துக் களுக்கு பெயரு.

ரம : சாமா ! என்னை விட்டுடு. கொஞ்சம் கிருபை செய்.

சா : சரி, ஒண்ணுமட்டும் போடட்டுமா.

ரம : ஒண்ணு ? இனிமே என்னாலே ஒரு துளி கூட சாப் பிட முடியாது.

சதா : என்னடா நிர்த்தூளி பண்றே ! குழந்தைகளுக்கு எண்ணெ போட்டினக்கூட, வீடு இத்தனை ரகளைப் படாது. திமிலோகப்படுத்தறயே ?

ரம : விளக்கெண்ணெயைக் கூட குடம் குடமா சாப்பிட் டுடலாம். ஆனா இதை........

சா : மாமா ! காலத்தை ஒட்டி எல்லாத்தையும் அனு சரிக்க வேண்டாமா ?

ரம : அப்பா ! என்னை விட்டுடு. கோடி புண்ணியம் உண்டு. நீ செய்ற உபகாரத்துக்கு உன்னை ஈரேழு

ஜன்மத்துக்கும் மறக்கமாட்டேன். ஆமாம், நிச்சயமா மறக்கமாட்டேன்.

சுதா: ஈரேழு ஜன்மத்துக்கும், சப்பாத்தியைக் கையிலே எடுத்துண்டு, சாமா உன்னை விரட்டிண்டு விரட்டிண்டு வரணுமா? சரி, போகப்போக சரியாய்ப் போயிடும். ரமணி, உன் பால்ய வீம்பு இன்னும் மறையல்லே, பார்.

ரம: நான் எழுந்திருக்கட்டுமா?

சுதா: அப்பா, நீ சாப்பிட வேண்டாம். நாங்க சாப்பிடறதையாவது பார்த்திண்டிரு.

## காட்சி 3

ரமணி: சாயந்திரமாய்டுத்து. கொஞ்சம் வெளியிலே போய் சுத்திப்புட்டு வறேன்.

சாமா: இந்தாங்கோ! டீ சாப்பிட்டுட்டுப் போங்கோ.

ரம: அதுக்கென்ன?........என்ன, சக்கரேங்கற நாமதேயமே இல்லையே?

சா: குழந்தைகளுக்கே சக்கரை போறல்லே.

சுதா: குழந்தைகளுக்கும் நமக்கும் வித்தியாசம் இதிலே ஒண்ணிலேதான் காட்டல்லே.

சா: டீ உடம்புக்கு ரொம்ப நல்லது. கொஞ்சம் பால் இருந்தாலும் போராறதுதோன்னே?

சுதா: சாமா, ரமணிக்கு இன்னொரு கப்பு கொடு.

ரம: அடாடா! எதேஷ்டம்! எதேஷ்டம்!

சதா: அவன் சங்கோஜப்பட்றான். நீ சும்மா கொடு.

ரம: என்னை மன்னிச்சுக்கோப்பா. என்னாலே முடியவே முடியாது.

சதா: சாப்பிடு. திரும்பி வர நேரமாகும். சாப்பிடு.

ரம: சதாசிவம்! என்னை இந்த தடவை மட்டும் விட்டுடு. நான் சொல்றதை தயவுசெய்து கேளேன். நான்.... வறேன்.

சதா: சீக்கிரம் வந்தூடு, ரமணி. (போகிறார்)

சா: என்ன இவ்வளவு பிஹு பண்றாரே?

சதா: புதுசோனோ? அப்படித்தான். நம்ம நிலைமை அவனுக்குத் தெரியுமா?

சா: நல்லதா, புதிசா பழகறதுன்னு கஷ்டமாயிருக்கு.

கோ: அவர் எங்கே?

சா: ரமணியா?

கோ: அவருக்குன்னு ஸ்பெஷலா ரெண்டு சப்பாத்தி தட்டிண்டு வந்திருக்கேன்.

சதா: பேஷ்! ரமணி திரிகால ஞானிதான். வரப்போற அபாயத்தை தெரிஞ்சிண்டுதான், முன் ஜாக்கிரதையா நழுவிட்டான்.

மன்: எஜமான்! எஜமான்!

சா: என்னடா?

மன்: அவர் பெட்டி எங்கே இருக்குங்க?

சா: யார் பெட்டிடா?

மன் : நம்ப வீட்டுக்கு வந்திருக்காரே? அவருதான்.

சா : எதுக்கு ?

மன் : அவரு ஊருக்கத் திரும்பிப் போறாராம். தன் பெட்டியை ரயிலடிக்கு உடனே கொண்டு வரச் சொல்லிப்புட்டு வேகமா ஓடுறாரு.

கோ : இதுக்குத்தானா இத்தனை அவசரமா சப்பாத்தி தட்டினேன்?

சதா : நான் என்னென்னமோ நினைச்சிண்டிருந்தேன். எதுக்கும் காலம் வரவேண்டாமா?

சா : போறாத காலம்.

---

# பள்ளிக்கூட உபாத்தியாயர்

## காட்சி 1

உபாத்தியாயர் வெங்கிட்டு: மருதே!....டேய் மருதே! அட பள்ளிக்கூடம் முடிஞ்சு பசங்க வீட்டுக்குக் கூட போயிருக்க மாட்டாங்க! மணியை அடிச்சவுடனே தூக்கமா?....டேய் மருதே.

மருதை: என்னங்க, ஸார், கூட்டீங்களா?

வெங்: ஏண்டா, உன் தூக்கத்துக்கு சமயா சந்தர்ப்பம் கிடையாது?

மரு: சும்மா உக்காந்திருக்கற நேரத்துக்கு கொஞ்சம் கண்ணசந்தேன். கோபிச்சுக்றீங்களே?

வெங்: கோபிச்சுக்காம, உனக்கு ஒரு பஞ்சமெத்தை தானம் பண்ணச் சொல்றீயா?

மரு: அந்தக் காலங்களா? செக்கிலே பூட்னமாடுபோலே, காலையிலேர்ந்து பொளுது சாயறமட்டும் உசிரை விடல்லீங்களா?

வெங்: ஹூம்! நீயா அப்படிச்செய்வே? அப்புறம் எனக்கு துன்பம் தர ஆளில்லாமல் போய்டுமே?

மரு: எசமான், நன்னியைமட்டும் மறக்கக் கூடாதுங்க. தலைமுறை தலைமுறையா இந்த பள்ளிக்கூடத்திலே வேலை செஞ்சுக்கிட்டு வறேன். வாய்கூசாம இப்படிப் பேசறீங்களே? உங்க பாட்டனூர் காலத்திலேர்ந்து பாடுபட்டேன்.

வெங்: இப்படி வேலை செய்யாம தூங்கினு, நீ சிரஞ்சீவி யாயிருக்க வேண்டியதுதான்....மருதே! அதோ யார் வராங்கன்னு போய்ப் பார்.

மரு : (போய்க்கொண்டே) யாரு வருவாங்க? பொளப்பத் தவங்க வேலையில்லாட்டி பள்ளிக் கூடத்துக்கு வந்து கொம்மாளம் அடிக்கறது. ஐயா வாயும் இரும்பு. அசபோட்ற மாடுமாதிரி, பேசிகிட்டே யிருப்பாரு.

வெங் : டேய்! அதிகப் பிரசங்கி.

மரு : பிரசங்கம் எல்லாம் நமக்கு பண்ணத் தெரியாதுங்க.

வெங் : டேய்! மருதை. வரவங்களே நீ போய் எதிர் கொண்டு அழைக்க வேண்டாம். நீ கண் மறவாப் போ (சிறிது தாமதம்)

அய்யாசாமி : நமஸ்காரம், ஸார்!

வெங் : நீங்க யார் தெரியல்லயே?

அய் : நன்னாப் பாருங்கோ. இப்போ தெரியரதா?

வெங் : உங்க மூஞ்சி நன்னா தெரியரது. அது யாருன்னு தான்.........

அய் : அப்பாசாமி பிள்ளை....

வெங் : அடே! அய்யாசாமியா? அப்பவே சொல்லக் கூடாது.

அய் : நீங்களா தெரிஞ்சுக்கறே ளான்னு பார்த்தேன்.

வெங் : ஒரே அடியா வளந்தூட்டயே? அப்போ எல்லாம் இத்தனூண்டு வாண்டுப்பயலா இருப்பே.

அய் : என்னை கொட்டடியிலே எல்லாம் போட்டுகொன் னுறுக்கீங்களே?

வெங் : இப்போ அந்தப் பலனைப்பாரு. அப்போ கஷ்டப் பட்டு படிச்சே. இப்போ கைமேலே பலன்.

அய் : எல்லாம் உங்க ஆசிர்வாதம்தான்.

வெங் : என்ன அய்யாசாமி சௌக்கியமா இருக்கியா ?

அய் : அதுக்கெல்லாம் ஒண்ணும் குறவில்லே.

வெங் : கல்யாணம் ஆய்டுத்தோனோ?

அய் : ரெண்டு குழந்தையும் இருக்கு.

வெங் : அப்பா இருந்தார்னு ரொம்ப சந்தோஷப்படுவார். நானும் அவரும் ரொம்ப சிநேகிதம்.

அய் : அப்பாவும் அடிக்கடி சொல்வார். நீங்க ரெண்டு பேரும் மாந்தோப்பிலே அடிக்கற லூட்டி எல்லாத்தை யும் பத்திபத்தியா சொல்லுவார்.

வெங் : அது ஒரு காலம். அதோ பார். மாமரத்திலே எல்லாம் ஒரே பிஞ்சாயிருக்கே, அந்தக்காலமா இருந்தா, ஒரு மாம்பிஞ்சை கண்ணுலே காண முடியுமா ?

அய் : நீங்ககூட புளியமரத்திலே ரொம்ப நன்னு ஏறுவே ளாமே?

வெங் : அதுக்கூட உன்கிட்டே சொல்லிப் புட்டானு? பைத்தியக்காரன்.

அய் : எப்போதும் உங்களைப்பத்தியே பேசிண்டிருப்பார்.

வெங் : வேப்பம்பழம்னு அவனுக்கு உயிர். அந்த காலத் திலே யெல்லாம் வேப்பம்பழ அப்பாசாமின்னுதான், உங்க அப்பா பெயர் எல்லாருக்கும் தெரியும்.

அய் : சரி, பள்ளிக்கூடம் எப்படி நடக்கறது?

வெங் : பள்ளிக்கூடத்துக்கு என்ன? ஜோராத்தான் நடந் துண்டுவரது.

அய் : எத்தனை கிளாஸ் இருக்கு.

வெங் : நாலு கிளாஸ்தான் இருக்கு.

அய் : நாற்பது வருஷமா....

வெங் : அந்தக் காலத்திலே நாலு பேர்தான் தினம் வருவா. இப்போ எல்லாம் என்ன நினைச்சே. நாற்பது பேர் வராங்க.

அய் : நீங்க ஒருத்தராவா....

வெங் : வேறு என்ன செய்யறது? எனக்கு ஒரு அஸ்ஸிஸ்டெண்டு இருக்கான். அவனுக்கு எப்போதும் ஏதாவது ஒண்ணுமாத்தி ஒண்ணு வந்தூடும்.

அய் : அப்படின்னு, நீங்க ஒருத்தராவா இத்தனையும் பார்த்துக்கறேள்?

வெங் : மருதே ஒத்தாசையாயிருப்பான். ஒரு கிளாஸுக்கு கணக்கு, ஒரு கிளாஸுக்கு ஸயன்ஸ், ஒரு கிளாஸுக்கு ட்ரில், ஒரு கிளாஸுக்கு சரித்திரம்.

அய் : உங்க அஷ்டாவதானம்தான் எனக்கு விசித்திரமா தோன்றது.

வெங் : இதெல்லாம் என்ன ப்ரமாதம். ஆயிரம் பேருக்குச் சொல்லித்தர தெம்பு இருக்கு எனக்கு. என்ன நினைச்சுண்டே?

அய் : ஆயிரமா? நன்னுச் சொன்னேள்? எத்தனை ஆயிரம் பேர் உங்ககிட்டே வாசிச்சிருக்கா.

வெங் : அதெல்லாம் சொல்லி என்ன பிரயோசனம்? இதோ பார், அய்யாசாமி, நம்ப மனச்சாக்ஷிக்கு விரோத இல்லாம வேலைசெய்யனும். அவ்வளவுதான் நம்ப கக்ஷி. ஆமாம்.

அய் : உங்க கையாலே குட்டுபட்ட விசேஷம் எல்லோரும் இப்போ குபேரனா இருக்கா.

வெங் : நம்ப கடமையை நம்ப செய்யவேண்டியது. அப்புறம் அவனவன் தலையிலெழுத்து. கொஞ்ச தூரம் தான் கைதூக்கி விடலாம். அதுக்கப்புறம் அவனவன் சாமர்த்தியம்.

அய் : ஸார் ! அப்போ பாத்தாப்பலேயே இருக்கேள்.

வெங் : இதெல்லாம் அவாளாவா பிறவி. இந்த ஊரிலே நடமாட்ற ஆசாமிகள் எல்லாம் நம்பகிட்டே தயாரானவங்க. தஸ்புஸ்ஸுன்னு ரெண்டு வார்த்தை பேசிப்புட்டா பெரிய மனுஷாளா ஆய்ட முடியுமா ? அய்யாசாமி, நான் இதெல்லாம் லக்ஷியம்பண்றவன் இல்லே, ஆமாம்.

அய் : அப்படி ஏதாவது அவா....

வெங் : அதுக்குச் சொல்ல வரல்லே. ஒரு சமயம் பார்த்துக்கோ. கொஞ்சம் பணத்தட்டாயிருந்தது. கோடி வீட்டு கோபாலன் கிட்டே கடனா பத்து ரூபாய் கேட்டேன். அவன் மூஞ்சியை எப்படி வச்சுண்டான் தெரியுமா ?

அய் : என்ன தானமா கேட்டேள் ? கடன் தானே ?

வெங் : அதத்தானே சொல்லவறேன். அவன் மூஞ்சியை காளவாய் மாதிரி வெச்சுண்டு 'திரும்பி வருமோன்னு' கேட்டான்னா ?

அய் : உங்களுக்கு ரொம்ப கோபம் வந்திருக்குமே.

வெங் : கோபம் பத்திண்டு வந்தது.

அய் : அப்புறம் என்ன செஞ்சேள்?

வெங் : பேசாம வந்தூட்டேன்.

அய் : அப்புறம் பணத்துக்கு ?

வெங் : எப்படியோ ஆட்டைத் தூக்கி மாட்டிலேபோட்டு, மேக்கப்பு பண்ணேன் வச்சுக்கோயேன். இல்லே, ஒரு வார்த்தைக்கு சொல்லவறேன்.

அய் : விட்டு வய்யுங்கோ. அருமை தெரியாதவா.

வெங் : அந்தக் கோபாலு எங்கிட்டே பட்ட அடி என்னன்னு நினைச்சுண்டே ?

அய் : அவரை விட்டுத்தள்ளுங்கோ. என் கையைப் பார்த்துண்டாப் போறுதா ?

வெங் : கையிலே என்ன ?

அய் : இதுகள் ரேகை இல்லே.

வெங் : ஏதாவது ஆபரேஷன் ஆச்சோ ?

அய் : அதெல்லாம் இல்லே. நீங்ககொடுத்த பிரம்படியின் தழும்புதான்.

வெங் : இப்போ எல்லாம் மூச்சு பேச்சு விடக்கூடாது என் கிட்டே.

அய் : அது முடியற காரியமா ?

வெங் : இப்போ எல்லாம், பசங்களை நான் தொட்றதில்லே.

அய் : கையாலேயே ? பிரம்பாலேயே ?

வெங் : பசங்கள அடிக்கற வழக்கத்தை அடியோடு நிறுத்திப்புட்டேன்.

அய் : அதான் புத்திசாலித்தனம். அதுசரி, எல்லாம் போர்ரதா ?

வெங் : என்ன செய்றது? ஒண்ணும் போறல்லே, போறல் லேன்னு சொல்லிப்புட்டா போறுமா. அதுக்கு பரி காரம் தேடணும். நம்ம ஒருத்தர் மட்டுமா கஷ்டப் பட்றோம். உலகத்துக்கே கஷ்டம். அதை சமாளிச் சுக்கணும்.

அய் : பசங்களுக்கு ஸ்லேட்டு, பென்ஸல் எல்லாம் போது மான அளவுக்கு ஆம்பட்றது கஷ்டமாச்சே.

வெங் : அதுக்கெல்லாம் வழிவச்சிருக்கேன். நாளேக்கு சவகாசமிருந்தா இப்படி, பள்ளிக்கூடத்துக்கு வாயேன்.

அய் : எனக்கே ரொம்ப நாளா ஆசையாயிருக்கு. ஒரு கையிலே ஸ்லேட்டும் மறுகையிலே டிப்பன் பாக்ஸை யும் எடுத்துண்டு, ஏன் மறுபடியும் ஸ்கூல்லே சேரக் கூடாதுன்னு இருக்கு.

வெங் : அந்தமாதிரி காலம் இனிமே எங்கே நமக்கு வரப் போறது. கவலேயே இல்லாம பட்டாணிக் கடலேயை யும், வேர்க்கடலேயையும் கொரிச்சிண்டு, இருக்க லாமே.

அய் : வாங்களேன் இப்படி வயல்வழியாப் போயி ஆத்தங் கரைக்குப் போகலாம்.

வெங் : பேஷாப் போலாம்.

மரு : எசமான்! எசமான்?

வெங் : எண்டா, மருதே.

மரு : வூட்லே மண்ணெண்ணே சொட்டுகூட இல்லீங்க ளாம்.

வெங் : அதுக்காக?

மரு : எங்களுச்சும் போய் வாங்கிட்டு வரச்சொல்றாக.

வெங் : குத்தி விளக்கை ஏத்தி வக்கச்சொல்லு. வீடும் லக்ஷ்மீகரமாயிருக்கும்.

மரு : அதத்தான் நானும் சொல்லலாம்னிட்டிருந்தேன்.

வெங் : போடா, போடா! நான் சொன்னதைச் செய்யச் சொல் போ.

மரு : சரிங்க.

அய் : இதெல்லாம் என்ன தோரணம்?

வெங் : அது தெரியாதா உனக்கு?

அய் : தெரியாமல்தானே கேட்டேன்.

வெங் : நாளைக்கு இன்ஸ்பெக்ஷன்.

அய் : ஓகோ.

வெங் : அந்தக் கஷ்டத்தை ஏன் கேக்கறே? ஸூட்டை யும் ஹாட்டையும் போட்டுண்டா, இவங்களுக்கெல் லாம் தலைகால் புரியாது. என் மாதிரி ரெண்டு பேர் ஆம்புட்டுட்டா விரட்டு விரட்டுன்னு விரட்டறது.

அய் : உங்களையா? நன்னச் சொன்னேள்? உங்ககிட்டே எல்லாமா?

வெங் : அந்தக் காலமா? முழியிலே விரலை விட்டு ஆட் டிப்பூடுவேன். அப்போ மாதிரியா? இப்போ எல் லாம் வயசாய்டுத்தோன்னோ?

அய் : என்ன அப்படிச் சொன்னேள்? கடுகு சிறுத் தாலும் காரம் குறையுமா?

வெங் : உனக்குத் தெரியும் என் மகிமை. புதுசாவரவன் அப்படித்தான் தலை கீழா நடப்பான். அவன் பவரை எல்லாம் என் மேலேதானே காட்ட முடியும்?

அய் : அப்படி எல்லாம்....

வெங் : நாளைக்கு நீயே வாயேன். இன்ஸ்பெக்டர் அடிக்கற கூத்தை கண்ணுலே பாறேன்.

அய் : கட்டாயம் வறேன்.

வெங் : உனக்கே சிரிப்பா இருக்கும்? நான் எத்தனை experienced hand. அவன் சின்னவனாயிருப்பான். அவன் கிட்டே பவர் இருக்கோனோ, நம்ப போறுத காலம் நம்மே பேரிலே தாருமாறு எழுதி வச்சூட்டுப் போறு? நீயே சொல்லு.

அய் : அப்படி ஒண்ணும் நடக்காதுன்னுதான் எனக்குத் தோன்றது.

வெங் : நான் பொய்யா சொல்றேன். வயசுக்கு மரியாதை ஏதப்பா? கண்ணாடி போட்டுண்டு வந்தூட்டாத்தான் தலைகால் தெரியாதே.

அய் : மாமா, நானும் கண்ணாடி போட்டுண்டிருக்கேன். சந்தடி சாக்கா....

வெங் : அட, ஒரு பேச்சுக்குச் சொல்ல வறேன்.

அய் : நாளைக்குக் கட்டாயம் வறேன்.

வெங் : நம்ப ஏற்பாட்டை எல்லாம் நாளைக்கு வந்து பாரு. அப்புறம் சொல்லுவே.

அய் : கட்டாயம் வறேன். வராம இருப்பேனா?

## காட்சி 2

சா : அறஞ்செய விரும்பு.

கம : ஆறுவது சினம்.

சா : ஈவதை விலக்கேல்.

துரை: டேய்! ஏன் கத்திறீங்க? தொண்டத்தண்ணீ வத்திப் போக.

சா: இப்போதாம்பா ஜலம் குடிச்சோம்.

துரை: அதுக்கோசரம் தவக்களே மாதிரி கத்தணுமா?

சா: நான் ஒண்ணும் தவக்களேயில்லே.

கம: நானும் இல்லே.

துரை: சரி, சமத்தாப் படிங்கோ.

கம: ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.

சா: ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.

கம: மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டாம்.

துரை: ஏண்டா, இப்படி அடிவயத்திலேர்ந்து கத்தறீங்க.

கம: டேய், சாமா! நம்ப எழுதலாண்டா. அப்பா வாய் அப்போதாவது அடைக்கும்.

சா: சரி, நான் காப்பி எழுதப்போறேன்.

துரை: டேய், என்னடா அது?

சா: ஏன், வாழ இலேதான்.

துரை: வாழை இலையை எடுத்தவுடனே, சாப்பிடத்தான் உக்கார்ரியோன்னு நினேச்சேன்.

சா: இல்லேப்பா! காப்பி எழுதப்போறேன்.

துரை: ஏண்டா, காப்பி எழுதறதுக்கு வாழை இலே எதுக்கடா?

சா: இப்போ நாங்க ஸ்லேட்டிலே எழுதறதில்லே. வாழ இலேயிலேதான் எழுதறோம்.

துரை : பேஷ்! அதான் பார்த்தேன். கொல்லேயிலே சாப்பாட்டுக்கு ஒரு இலையைக்கூடக் காணோம்.

சா : எங்க வாத்தியார் யோசனை அப்பா இது. பேப்பரு மில்லே. ஸ்லேட்டும் குச்சியும் ஆம்பட்றதில்லே. போறதகாலமோனே? எங்க பள்ளிக்கூடத்திலே எல் லாரும் வாழ இலேயிலேதான் ஈருக் குச்சியாலே எழுதறோம்.

துரை : அருமையான வேலேயாயிருக்கே. அதான் உங்க சட்டை எல்லாம் வெளுப்பாயிருக்கு.

சா : நாளைக்கே ஸ்கூல்லே இன்ஸ்பெக்ஷன், அப்பா.

துரை : நன்னு டிரஸ் பண்ணிண்டு போங்கோ.

கம : நன்னு டிரஸ் பண்ணிண்டு வரவாளுக்கு பிரைஸ் கூடத்தரப் போராளாம்.

சா : ஆமாம், உன் அழகுக்கு பிரைஸ் வேறயா?

கம : நீ ரொம்ப அழகோ ?

சா : நீ ரொம்ப அழகோ ?

துரை : சரி, ரெண்டு பேரும் ஆரம்பிச்சுட்டேங்களா ?

சா : அவன்தானே சொன்னன் ?

காமா : அவதானே சொன்னு ?

துரை : பாடத்தைக் கவனியுங்கோ. அப்புறம் யுத்தம் பண்ண லாம். நாளைக்கு ஏதாவது பரீக்ஷை உண்டா ?

சா : பேஷா உண்டு.

துரை : அதக்கவனியுங்கோ. உங்க சண்டைதான் எப் போதும் இருக்கே ?

## காட்சி 3

வெங்கிட்டு : மருதே! இன்னிக்கு இன்ஸ்பெக்டர் ஐயா வருரு, தெரியுமில்லே?

மருதை: அவரை நமக்கு தெரியாதுங்களே.

வெங் : அடமடையா, அவர் வருர் தெரியுமான்னில்லே கேட்டேன்!

மரு : புரிஞ்சுக்கிட்டேனுங்க.

வெங் : நீ புரிஞ்சுக்கிறது சரி. சரியா நட.

மரு : அதப்பத்திக் கவலேயே வேண்டாங்க. நிமிர்ந்து ராஜப்பார்டு மாதிரியில்லே நடப்பேன்.

வெங் : என்ன குதர்க்க புத்திடா உனக்கு! சாமர்த்தியமா நடந்துக்கோ. கேட்டதுக்கு பதில் சொல்லு. வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டாயிருக்கட்டும். அதிகப் பிரசங்கி மாதிரி நீயா பேச ஆரம்பிக்காதே. எனக்கு கெட்ட கோபம் வரும்.

மரு : தெரியுங்க.

வெங் : நான் சொல்றதை சொல்லிப்புட்டேன். செவிடன் காதிலே சங்கு ஊதின மாதிரிதான்.

மரு : கவலேப்படாதங்க, ஸார்.

வெங் : நம்ப காலம் அப்படி இருக்கேன்னுதான்.

மரு : எப்போ வருரு இன்ஸ்பெக்டர் ஐயா?

வெங் : வந்துடுவாரு. இதோ பார், மருதை. குளந்தேங்களே எல்லாம் சத்தம் போடாத பாத்துக்கோ. இறச்சல் போட்டா, நம்ப ரிபோர்ட்டு மோசமாய் போயிடும்.

மரு : மூச்சுப் பேச்சுக் கேக்காதுங்க.

வெங் : சரி, நம்ப அஸிஸ்டெண்டு ஏன் இன்னும் வரல்லே?

மரு : அடேடே! மறந்துட்டேனுங்களே! அவரு........ அவரு.....

வெங் : அவனுக்கென்ன? சொல்லித்தொலே.

மரு : அவருக்கு ஜுரங்க. உங்களை ரொம்ப கேட்டுக் கிட்டதாக சொல்லச் சொன்னாரு.

வெங் : எல்லாம் சமயத்துக்கு வரும். அவனைச் சொல்லி என்ன பிரயோஜனம். என் போறாத காலம்........சரி, நீ உள்ளே போய் இரு. ஜாக்கிரதையா எல்லாத்தை யும் பாத்துக்கோ.

மரு : மருதையை நம்புங்கோ.

வெங் : வேற கெதி? ம....

அய் : (வந்துகொண்டே) தயாரா இருக்காப்பிலே இருக்கு?

வெங் : இருந்துதானே ஆகணும். என்ன அய்யாசாமி, டிரஸ் எல்லாம் பலமாயிருக்கே.

அய் : எல்லாம் ரெடிதானே?

வெங் : அதுக்கென்ன? அந்தப் பழிதான் இன்னும் வரல்லே. வரச்சேயே எரிஞ்சு விழுவாங்க.

அய் : ஓகோ!

வெங் : பாவம்! ஒரு மனுஷன் காத்திண்டிருப்பானேங்கர கவலே; கொஞ்சமாவது இருக்கா பாத்தீயா, அய்யா சாமி? பதவி மூளையை கலக்கிப்பிடறது. தான் சின்ன பயலாயிருந்தாலும், ஒரு பெரியவரை இப்படி அவமானப்படுத்தரோமேன்னு நினைச்சாத்தானே.

அய் : ஏன், ஆரம்பிக்கலாமே?

வெங் : என்ன? ஆரம்பிக்கறதா? எதை?

அய் : இன்ஸ்பெக்ஷனைத்தான்.

வெங் : என்ன அய்யாசாமி, இந்தப் பள்ளிக்கூடத்திலே விளையாடின ஞாபகம் வந்தூடுத்தா?

அய் : இல்லே, நேரமாறதேன்னு பார்க்கறேன். இன்னிக்குள்ளே, இதை முடிச்சூட்டா, நாளைக்கு ஊருக்குப் போகலாம்.

வெங் : எதை முடிக்கறது? எனக்கு ஒண்ணும் புரியல்லயே.

அய் : நான்தான், ஸார், இன்ஸ்பெக்டர்.

வெங் : (பதறி) என்ன நீயா....இல்லே. நீங்களா?

அய் : என்ன ஸார், நெருப்பை மிதிச்சூட்டாப்பிலே பதர்றேளே. இன்னிக்கு உங்க பள்ளிக்கூடத்தை இன்ஸ்பெக்ட் பண்ணிப்புட்டா, நாளைக்கு........

வெங் : இன்ஸ்பெக்டர் பெயர் சாமின்னு போட்டிருந்ததே?

அய் : என் பெயர்தான் ஏ. ஸ்வாமி.

வெங் : கோபிக்கப்படாது என்னை க்ஷமிக்கணும். ஏதோ தெரியாம உளறிப்புட்டேன். யார்னு தெரியல்லே. பழைய நினைவை மறக்காம........ஏதோ, என் போறாத காலம்!........மன்னிக்கணம்........ஏதோ தவறு செஞ்சூட்டேன்.

அய் : சேசே! அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க சொன்ன என்ன? எனக்கு அப்பவே வர இஷ்டமில்லே. நான் படிச்ச பள்ளிக்கூட வாத்தியாரையே இன்ஸ்பெக்ட் பண்ண முடியாதுன்னேன். கேக்கறாளா? ட்யூடி. செஞ்சுதானே ஆகணும்.

வெங் : மிஸ்டர் அய்யாசாமி, பெரிய மனசு பண்ணணும். நாற்பது வருஷமா இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்த றேன். இதுவரையிலே, ஒரு தப்புதண்டா நடந்த தில்லே. ஏதோ என் போறுதகாலம், இப்படி நடந் தூடுத்து.

அய் : போறுதகாலமா? நன்னாச் சொன்னேள். ஒண்ணும் போறுத காலத்திலே, இத்தனை சாமர்த்தியமா ஸ்கூலை நடத்தறேளே. உங்க சாமர்த்தியமே சாமர்த்தியம். பசங்களை நன்னா பழக்கிவச்சிருக்கீர். காகித பென் ஸிலும் பேப்பரும் போறுத பிரச்னையை எத்தனை கெட்டிக்காரத்தனமா தீர்த்துப்புட்டீர்.

வெங் : பரீக்ஷை எல்லாம் கூட வைவோஸிதான்.

அய் : அதென்ன இளப்பமா ? அப்போதான், ஸார், புத்தி கூர்மையும், சமயோசித புத்தியும், பசங்க சாமர்த்தியமும் பன்மடங்கு அதிகரிக்கும்.

வெங் : பள்ளிக்கூடத்துக்கு கிராண்டு?

அய் : ரெண்டு மடங்கா ரெகமண்டு பண்ணப்போறேன்.

வெங் : நான் ஏதோ தவறாச் சொன்னதை ஞாபகத்திலே வச்சுக்கப்படாது. நீங்க........

அய் : என்ன நீங்க? மரியாதையாக் கூப்பிட்றதா இருந்தா நான் இப்பவே வெளியே போய்ட்றேன்.

வெங் : கோபிச்சுக்கப்படாது. எல்லாம் உங்களுக்கு திருப்திதானே.

அய் : காலத்தை ஒட்டி இத்தனை சாமர்த்தியமா பள்ளிக் கூடத்தை நடத்தறேளே. அது ஒண்ணே போறுமே.

---

# காகிதச் சிக்கனம்

## காட்சி 1

(வண்டி வந்து நிற்கிறது)

கமலா : அடே, சீனுவா? வாண்ணு, வா. ஏது இப்படி சொல்லாம திடுதிப்புன்னு........

சீனு : என்ன கமலா? சௌக்கியமா? ராமு எப்படியிருக்கான்?

கம : என்ன அண்ணு? வறதப்பத்தி முந்தியே சொல்லப் படாது?

சீனு : நான்தான் லெட்டர் போட்டிருந்தேனே?

கம : உன்னைப் பார்த்தவுடனே உன் அத்திம்பேர் ஆச்சரியப்படுவார்.

சீனு : நல்லவேளை! திகில் அடைஞ்சூடுவார்னு சொல்லுவயோன்னு பயந்தேன்.

கம : அப்பா அம்மா எல்லாரும் எப்படியிருக்கா?

சீனு : அவாளுக்கெல்லாம் உன் கவலைதான். புதுசா குடித்தனம் வச்சிருக்கே. ராமுவும் சின்னப் பையன் தானே.

கம : வீட்லே வேலைக்காரன் இருக்கான். சாமான் எல்லாம் வாங்கிண்டு வர ரொம்ப சௌகரியமாயிருக்கு.

சீனு : எல்லாம் சரிவர ஆம்பட்றதா? அம்மா கூட ஏதோ கட்டிக் கொடுத்திருக்கா. அவளுக்கு வீட்டு

சாமானை எல்லாம் இங்கேயே அப்புறப்படுத்த ணும்னு ஆசை. என்ன பண்றது? கிட்டக்க ஒரு அடியிலே இருக்கா, மாட்டு வண்டியிலே கொண்டு வந்து போடலாம்னு?

கம : இந்த மனசு ஒண்ணே போறும், அண்ணு!

சீனு : இது என்ன வாசல்லே திருவிழாமாதிரி கூட்டம்? சங்கிலி கோத்தாப்பிலே நிக்கருளே!

கம : அதுவா? ஒண்ணுமில்லே? ரேஷன் வாங்க நிக்கரு.

சீனு : வேலக்காரனை அனுப்பிச்சூட்டியா?

கம : நம்ப வீட்டு வாசல்லே கடைசியிலே நிக்கருன் பார். அவன்தான் நம்ப ஆசாமி.

சீனு : சரி, சரி, சாயந்திரத்துக்குள்ளே வீடு திரும்பிடு வான் போலிருக்கு.

கம : ஒவ்வொரு சமயத்திலே ஒரு தேதி கூட தாண்டிப் போய்டும்.

சீனு : காலம் அப்படி, என்ன செய்யறது?....வீடு நன்னு இருக்கு. உன் மனம்போல அதுவும் அமைஞ் சிருக்கு.

கம : அந்த விதத்திலே ஏதோ அதிர்ஷ்டம்தான்.

சீனு : ராமு கெட்டிக்காரன். எதையும் யோசிச்சுத்தான் செய்யருன்.

கம : ரொம்ப மகிழ்ந்து போய்டாதே. வீடு பெரிசா இல்லாட்டா, அவர் அடிக்கற லூட்டிக்கி, அப்புறம் இடம் வேண்டாமா?

24456
MAHAMAHALAI ADIGAL LIBRARY

சீனு: லூட்டியா? அவன் என்ன குழந்தையா?

கம: குழந்தைகளையாவது கண்டிக்கலாம்....சரி, சட்டையைக் கழட்டிட்டு உள்ளே வா. காப்பி சாப்பிடலாம். ஆறிப் போய்டும் (தாமதம்).

சீனு: கமலா! கமலா! என்ன இது? வீடெல்லாம் ஒரே குப்பையாயிருக்கு? இத்தனை காகித குப்பைகளும் எப்படி வந்தது இங்கே?

கம: அதையேன் கேக்கறே. ஆபீஸ்லேர்ந்து சாயந்திரம் வரப்போ கோட்டுப்பைகள் எல்லாம் பெரிசு பெரிசா தெரியும். ஏதோ காய்கறிதான் வாங்கிண்டு வந்திருக்கார்னு நினைப்பேன். அதுவும் இல்லே.

சீனு: பின்ன என்னத்தை தான் கொண்டுவரான்?

கம: இந்த பொக்கிஷங்கள் தான்.

சீனு: அடக் கஷ்டகாலமே? வீட்டையே குப்பைத் தொட்டி ஆக்கறானே?

கம: அப்புறம், என் பிராணன்னு போறது.

சீனு: அது சரி, கமலா, கட்டுரைகள் எல்லாம் இப்பவும் எழுதறானா ராமு?

கம: எழுதறாரோ, இல்லையோ? தபால்காரன் நம்ம வீட்டுக் கதவை இடிச்சு, திருப்பிக் கொண்டுவந்த நாள் தவர்றதில்லே.

சீனு: இவனுக்கு எப்பதான் இந்தப் பைத்தியம் விடப் போறதோ?

கம: அத்தனை காகிதக் குப்பைகளையும் பரப்பி வச்சுண்டு அவர் தேடறதைப் பார்த்தா, ஏதோ புதையல் கண்டு பிடிச்சூட்றவன் மாதிரிதான் இருக்கும்.

சீனு: நம்ப சொன்னு அவன் கேக்கவே மாட்டான். இத்தனை குட்டுபட்டும் தெரியல்லையே அவனுக்கு.

கம: இத்தனை பத்திரிகைகளுக்கு அனுப்பறாரே. அட ஒண்ணாவது வருதா?

சீனு: அத்தனையும் திரும்பி வறதே. அதச்சொல்லு. அடே ராமுவே வருனே. என்ன இது? சொப்பனத்திலே நடந்து வருப்பிலே வருன்.

கம: கால் பூமியிலே படறதாக ஞாபகம் இருந்தாத்தானே அவருக்கு.

ராமு: கமலா, அந்த பேன்டை வண்ணானுக்குப் போடாதே. நான் வந்து பாத்துக்கறேன். கோவிந்தசாமி ரேஷனுக்கு போயிருக்கானு? அவன் சாயந்திரமோ நாளைக்கோ திரும்பி வந்தவுடனே நான் உடனே அவனைப் பாக்கணும்னு சொல்லு. நீ சாயந்திரம்.....

சீனு: ராமு, டேய், ராமு. போறுண்டா உன் பிரசங்கம். இத்தனை தூரத்திலேர்ந்து நான் வந்திருக்கேன். என்னை கவனிக்காதபடி....

ராமு: அட சீனுவா! வாப்பா, வா....சாயந்திரம் இன்னிக்கு வெளியிலே போறவிஷயம்....

கம: என்ன இது? அத்தி பூத்தாப்பிலே அண்ணு வந்திருக்கான். வந்தவனை லக்ஷியம் பண்ணுதபடி....

ராமு: அடே, அத்திப்பூ கொண்டு வந்திருக்கானு. அதை நான் பார்த்ததில்லே. கொண்டாப்பா அதை இப்படி.

சீனு: அப்போ பார்த்தாப்பிலேயே இப்பவும் இருக்கான். கொஞ்சம்கூட மாறல்லே.

கம: அண்ணு அதிசயமாக வந்திருக்கான். அவனோடே பேசிண்டிருங்கோ. நான் இதோ காப்பி கொண்டு வறேன்.

சீனு : என்ன ராமு, வந்த தபால் கவரை எல்லாம் இப் படி பிரிச்சு பிரிச்சு போட்டிருக்கயே.

ராமு : பேப்பர் ஆம்படல்லே. எனக்கோ பத்தி பத்தியா எழுதியாகணும்........அடேடே.....இப்படி கொடுப்பா. அதக் கசக்கிப்புட்டயே.

சீனு : இது சின்ன காகிதத்துண்டுன்னு?

ராமு : உனக்கு அது இளப்பமா இருக்கு. அதன் பின் னடி பார்.

சீனு : இது என்ன, பாட்டு எழுதி யிருக்கயே?

ராமு : இந்த டிராயருக்குள்ளே பார்.

சீனு : என்ன குப்பை இது ?

ராமு : குப்பையா ? அத்தனையும் கட்டுரைகளப்பா. கற் பனை கொதிச்சு வரும்போது, அப்பப்படியே இந்தக் காகிதத் துண்டுகள் பின்னே எழுதிப்புடுவேன். ஒரு நாள் இந்த டிராயரை பூட்டாம போய்ட்டேன், வந்தது ஆபத்து.

சீனு : கமலா எல்லாத்தியும் அடுப்பெரிக்க அள்ளிண்டு போய்டுவாளோ ? அப்படியும் இத்தனை மிஞ்சி யிருக்கே ?

ராமு : உஸ்....அவகாதிலே விழுந்தூடப் போறது. என் தலை மறஞ்சவுடனே படையெடுப்பை ஆரம்பிச்சூடப் போறா.

சீனு : ராமு, இப்படிக் காட்டு.

ராமு : எதை ?

சீனு : உன் கையைத்தான். குழந்தை மாதிரி கையெல் லாம் மசி பூசிண்டிருக்கயே.

ராமு : மசியா ? நன்னாப்பாரு.

சீனு : எனக்கென்னமோ.......தெரியல்லே.

ராமு : கணக்கெல்லாம் கையிலேதான் போட்றேன். பேப்பர் ஆம்படல்லே.

சீனு : உன்கிட்டே பூதக்கண்ணாடி இருக்கா ?

ராமு : எதுக்கு ?

சீனு : நீ போட்ட கணக்கிலே தப்பு கண்டுபிடிக்கத்தான்.

ராமு : நீ கணக்கிலே ரொம்ப புலிதான். உன் உள்ளங்கால் தேய பெஞ்சிமேலே நின்னது எனக்குன்னாத் தெரியும்.

சீனு : ராமு, மெள்ளப்பேசு. கமலா வரா.

கம : அண்ணா, இந்தா காப்பி.

சீனு : கமலா போட்ற காப்பிக்கே ஒரு ஸ்பெஷல் டேஸ்ட்.

ராமு : ஆமாம். ஒரு தரம் குடிச்சூட்டா........

கம : அதென்ன கோவிந்தசாமியே வரானே ?

கோவி : அம்மா. ரொம்ப தலையை சுத்துதுங்க. கொஞ்சம் மோர்த்தண்ணி கொடுங்க.

ராமு : ஏண்டா ? இப்படி வந்துட்டயே ? உன் க்யூ போய்டுச்சினா ?

கோவி : என் உயிர் தப்பிச்சாப் போறுங்க.

ராமு : அதிகப்பிரசங்கி. நீ என்ன ஓவியமோ? அத்தனை பேரும் நின்னு வாங்கல்லே?

கோவி : அவங்க கையிலே என்ன இருக்கு பார்த்தீங்களா?

ராமு : பைதான் தெரியறது.

கோவி: பை நிறைய பச்சணங்க கொறிச்சுகிட்டே பொருந்து சாயறமட்டும் நிப்பாங்க.

ராமு: கமலா, கோவிந்தசாமி கிட்டே தயிர்சாதம் கட்டி அனுப்பு. இல்லாட்டா துரைக்கு தாளாதாம். போடா போ. வேலையைப் பாருடா. காரியத்திலே ஒண்ணையும் காணும். பேச்சுதான் மிச்சம்.

கம: நீ போடா கோவிந்தசாமி! சமயக்கட்டுக்கு வா. ஏதோ கொடுத்ததை சாப்ட்டுட்டு உன் வேலையைப் பாரு.

கோ: அதானுங்க நல்ல பேச்சு. (போகிறான்)

சீனு: வேலைக்காரங்க மேலே சள்ளுபுள்ளுன்னு விழறயே?

ராமு: கடுபிடி இல்லாட்டா, நமக்கே வேட்டு வச்சுப்புடு வாங்க.

சீனு: பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் அனுப்ப காகிதம் ஆம்படறதா ?

ராமு: கண்ணிலே பட்ட காகிதத்தை எல்லாம் நான் விட்றதில்லே. பையிலே போட்டுண்டு வந்தூடுவேன். வீட்டுக்கு வந்த வுடனே சாகவாசமா அதுகளை கீழே பரப்பி ஒரு பக்கம் மட்டும் எழுதின காகிதத் துண்டு கள் இருக்கான்னு தேடிப் பார்ப்பேன். அட மருந் துக்கு ஒண்ணுவது அகப்படணுமே ? ஊஹூம். மூச்சுப் பேச்சு கிடையாது.

சீனு: இத்தனை குப்பைகளிலேயும் ஒரு பக்கம் மட்டும் எழுதின காகிதத் துண்டு ஒண்ணுகூட ஆம்படலையா?

ராமு: நான் என்ன பொய்யா சொல்றேன்? துருவித் துருவிப் பார்த்தும் ஒரு துரும்பு ஆம்படல்லேன்னு!

சீனு: காலம் அப்படி யிருக்கு. "பேப்பரை வீணுக்காதீர் கள்"னு போட்டிருக்கற பேப்பர்களைத் தான் எங்கே

கண்டாலும் காண முடியறது. எங்கே திரும்பினாலும் அந்த விளம்பரம்தான்.

ராமு: அது இல்லாத சுவர் ஏது ?

சீனு: நான் சொல்றதைக் கேளு. பத்திரிகைக்கு எழுதற பழக்கத்தை நிறுத்திவை.

ராமு: அதுக்கெல்லாம் வழி வச்சிருக்கேன்.

சீனு: அது என்ன புதுமை ?

ராமு: அதோ அந்த பீரோக்கு மேலே.....

சீனு: கட்டு கட்டா இருக்கே........

ராமு: ஹூம் அதுதான். இதோ நானே எடுத்துண்டு வறேன்.

சீனு: இதுகள் சுவடிகளா ?

ராமு: ஆமாம். சுவடிகள்தான்.

சீனு: இந்த தென்ன ஓலையை வச்சுண்டு........

ராமு: எழுத்தாணியாலே எழுதறது.

சீனு: என்னப்பா ! உனக்கு ஏதாவது........

ராமு: நான் ஒண்ணும் பைத்தியமில்லே. ஓலைச்சுவடி எழுதறது கஷ்டம் ஒண்ணு தவிர பழகிப் போச்சுன்னு, ஷார்ட்ஹாண்டுக்கு மேலே ஓடும் ஸ்பீட்.

சீனு: பேஷ் ! பேஷ் ! மின்சார சக்தி கூட உற்பத்தி செய்யலாம் போலிருக்கு.

ராமு: கற்பனை மின்சாரத்தை விடவா ? உனக்கெல்லாம் கேலியாயிருக்கு. முன் காலத்திலே யெல்லாம் முன் யோஜனையாத்தான் செஞ்சிருக்கா. பேப்பர் கிழிஞ்

சூடும். நாள்பட்டு நிக்காது. ஓலைச்சுவடி யுகாந்தரமா இருக்குமே.

சீனு: அருமையான யோசனைதான். கட்டுரைகளை எல்லாம் ஓலையிலேயே எழுதி அனுப்பிச்சூட்டா, பத்திரிகைகளையும் என் ஓலைச் சுவடிகளிலேயே போட்டு கொண்டு வரக்கூடாது.

ராமு: நடக்காமலா போகப்போறது? எல்லாம் கொஞ்ச காலத்திலே வந்தூடறது. காகிதம் அகப்படல்லையேங்கற கஷ்டமே இருக்காது பாரு.

சீனு: பிரதிகள் ஜாஸ்தி எடுக்க முடியாது.

ராமு: அது அச்சடிக்கறவா சாமர்த்தியம்.

சீனு: உன் யோசனை அபூர்வம்தான். ஆமாம், அப்படித்தான் செய்யணும். இல்லே இல்லேன்னு சத்தம் போட்டு என்ன பிரயோஜனம். இந்தமாதிரி சாமர்த்தியமா அந்தக் குறைகளைத் தீர்க்கணும்........யாரோ வருப்பிலே யிருக்கே.

ராமு: என் சிநேகிதன் சந்துரு. உனக்கு நேரமாச்சு. போய் குளிச்சுப்பிட்டு சாப்பிட ரெடியாயிரு. மணி ஆய்டுத்து.

சீனு: சீக்கிரம் வந்தூட்றேன்.

சந்: என்ன ராமு, இனிமே பேசுவியா?

ராமு: நான் உன்னோடே பேசறதெல்லாம் உன் கையிலே தானே இருக்கு.

சந்: நீ எல்லாம் முன்போல ராமுவா? இனிமே பேச மாட்டே.

ராமு: சந்துரு, சமாசாரத்தைச் சொல்லிப்புட்டு அடுக்கேன். நீ மாட்டுக்கு பேசிண்டே போறு?

சந் : மூள மாதிரியாப்பா நீ எல்லாம்? நீ பெரிய எழுத்தாளன். தமிழ் நாட்டின் இலக்கிய நக்ஷத்திரமா மின்னறே.

ராமு : சந்துரு, நீ சொல்றது ஒண்ணும் எனக்குப் புரியல்லயே ?

சந் : எப்படிப் புரியும்? "அற்புதன்" ஆண்டு மலர்லே, உன் கட்டுரை முதல்லே வந்திருக்கு....

ராமு : "அற்புதன்" ஆண்டு மலர்லே, என் கட்டுரையா?

சந் : என்ன ? மூர்ச்சை போட்டு விழுந்தூடுவே போலிருக்கே?

ராமு : நிஜம்மாவா ? சந்துரு, நீ விளையாடல்லியே ?

சந் : விளையாட்டா ! உன் கட்டுரை அற்புதம்பா. நம்பினு நம்பு. நம்பாட்டாப்போ. அதை அஞ்சு தடவை படிச்சேன். மறுபடியும் படிக்கணும் போலிருக்கு. அத்தனை ஜோராயிருக்கு.

ராமு : என் பேரு போட்டிருக்கோ? ராமுன்னு !

சந் : நன்னக்கேட்டே ? கொட்டை கொட்டை எழுத்தெல்லாம் கன்னத்திலே அறயுருப்பிலே இருக்கே?

ராமு : அப்படின்னு என் பெயர்........

சந் : தமிழ்நாடு முழுக்க அடிபடும். இதெல்லாம் ஒரு யோகம்ப்பா. உன் போட்டோ கூட வந்திருக்கின்னு.

ராமு : என் போட்டோ கூடவா ? நிஜம்மாவா ?

சந் : சரி சரி, நான் போறேன். நீ இப்படி கேட்டுண்டே போனே, எனக்கும் மூளை தவறிப் போய்டும். உன்னை அப்புறம் வந்து பார்க்கறேன்.

ராமு : சந்துரு, சந்துரு, இருடா.

சந் : சாயந்திரம் வரேம்பா.

ராமு : பிரசுரம் ஆனாலும் இப்படின்னு இருக்கணும். எல்லாம் காலம் பண்ற கூத்து.

## காட்சி 2

கமலா : (வந்துகொண்டே) இதோ பாருங்கோ. திருட்டு முழிமுழிக்காம, நான் கேக்கறதுக்கு பதில் சொல்லிண்டு வாங்கோ.

ராமு : ....ம்....சீனு எங்கே ?

கம : சீனு குளிச்சுண்டிருக்கான்........நான் சொல்றது காதிலே விழல்லே ?

ராமு : கமலா, உன்கிட்டே சொல்ல மறந்துட்டேனே.

கம : போறும், போறும். என்னாலே இந்த அவமானத்தை தாங்கவே முடியல்லே. பளிச்சுன்னு பதில் வேணும். ஆமாம்.

ராமு : கேக்கற கேள்விக்கு பதில் சொன்னா போறுமா ? அல்லது கவருக்குப் பிந்தி எல்லாம் எழுதியே காண்பிக்கணுமா ?

கம : வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு, ஆமாம். இதோ பாருங்கோ. இப்படிச் செய்யலாமா? எந்த புருஷனாவது இப்படி செய்றதுண்டா? யாராவது பார்த்தா என்னைப்பத்தி என்ன நினைப்பா? இதோ படிக்கறேன் கேளுங்கோ. இது எப்படி பத்திரிகையிலே வெளி வந்தது?

ராமு: கமலா, நீ சொல்றது எனக்குத் தலைகால் புரியல்லே. எது பத்திரிகையிலே வந்தது? யார் எழுதினு? என்ன எழுதினு? விவரமாச் சொல்லாதபடி புதிர் போட்றயே?

கம: நீங்க அனுப்பிச்ச கட்டுரைதான். உங்க பேர்தான் பல்லிளிச்சிண்டு திருட்டு முழி முழிக்கறதே?

ராமு: அட, அதச்சொல்றயா? என் போட்டோகூட வந்திருக்குன்னு சந்துரு இப்போதான் சொன்னுன். என்ன, கமலா, நம்ப பேர் எப்படி அடிபட்றது பார்த்தியா? நம்ப கட்டுரை முதல்க்கட்டுரை, கமலா, முதல்க்கட்டுரை.

கம: போறும். வாயை மூடுங்கோ. கட்டுரையாம் கட்டுரை. வெக்கமில்லே?

ராமு: இதிலே தப்பு என்னயிருக்கு?

கம: தப்பா? இதோ அந்தக் கட்டுரையை கையோடே வச்சிருக்கேன். முதல் பாராவை படிக்கட்டுமா?

ராமு: முதல் பாராவா? படி, படி. என் கற்பனை அத்தனையையும் அதிலே கொட்டியிருக்கேன், கமலா. ரெண்டு வரியைப் படிச்சூட்டு, "அற்புதம்"னு எந்தப்பய அலறும இருப்பான்? தெரியாமத்தான் கேக்கறேன்?

கம: நிறுத்துங்கோ. உங்க அபூர்வ கட்டுரையை படிக்கட்டுமா? கட்டுரையாம் கட்டுரை! கடிதத்தே அனுப்பிச்சூட்டு கட்டுரையாம்.

ராமு: கடிதமா? என்ன கமலா?

கம: படிக்கறேன், கேளுங்கோ. உங்க ஆச்சரியமான கற்பனைக் கடிதத்தை.

ராமு: படியேன்.

கம: கவனமாக் கேளுங்கோ. "தவறிழைப்பது மனித இயல்பு. கேவலம் ஒரு கடிகாரத்திற்காக தாங்கள் ஒரு காரிகையின் கண்ணீரைப் பெருக்க மனம் துணிந்தது நீதியா? தர்மமா? அடுக்குமா? தாங்கள் என் மீது கொண்ட அன்பு கேவலம் ஒரு கடிகாரத்தின் மதிப்பு கூட இல்லை என்று கேட்க என் மனம் பாலைவனத்து மணல் போல் கொதிக்கிறது....."

ராமு: கமலா, நிஜம்மா நான் இதை எழுதல்லயே!

கம: உங்க பேர்தான் போட்டிருக்கு கட்டுரையின் கீழே. நீங்களே பாருங்கோ.

ராமு: உண்மையைச் சொல்றேன். என் ஜன்மத்திலும் இந்தமாதிரி நான் எழுதினதில்லே. இதிலே ஏதோ தகராறு இருக்கு.

கம: நீங்க எழுதல்லயா? இந்த போட்டோ உங்களுது தானே?

ராமு: தவறிப்போய் வேறொருத்தன் கட்டுரையை என் பேர்லே போட்டிருக்கான்.

கம: வாயை மூடுங்கோ. செஞ்ச தப்பையும் துணிஞ்சு பண்ணிப்புட்டு, குசருக்கு இந்தப் பொய் வேறயா?

ராமு: கமலா, உன் கிட்டே நான் பித்தலாட்டம் செய்வேனா?

கம: இது பித்தலாட்டமா? அழிச்சாட்டியம்.

ராமு: நான் "அற்புதனுக்கு" 'காரிகையின் கண்ணீர்'னு அனுப்பிச்சேன்.

கம: அது 'காரிகையின் கடிதம்'னு தபால்லே போற வழியிலேயே புனர்ஜன்மம் எடுத்துடுத்தோ?

ராமு: எனக்கு என்னமோ இப்போ பைத்தியம் பிடிச்சது போலிருக்கு.

கம: இப்பவா பிடிச்சது? இது வேற பொய்யா?

ராமு: என்ன போறாத காலம். கமலா, நிச்சயமா சொல்றேன். இந்த கட்டுரையிலே ஒரு வரியும் நான் எழுதல்லே.

கம: அப்புறம் படிக்கறேன் கேளுங்கோ. "என்னை இவ்வுலகில் தன்னந் தனிமையாக விட்டு விடாதீர்கள். நான் உங்களேயே நம்பியிருக்கிறேன். பெண்கள் ஆண்களுக்கு அடிமை இல்லே. அவர்கள் அன்புக்கே அடிமைகள். இந்தக் கடிதம் உங்கள் மனதில் அணைந்துகொண்டிருக்கும் சுய அறிவையும் அன்புச் சுடரையும் மீண்டும் தூண்டும் என்று நம்புகிறேன்."

ராமு: இது நான் எழுதினதே இல்லே.

கம: பின்ன யார் எழுதினது?

ராமு: கமலா, உண்மையைச் சொல்றேன். நான் எழுதி அனுப்பிச்சது ஒரு அற்புதமான கதை. இந்த கடிதத்தை நான் எழுதினதாக எனக்கு ஞாபகமே இல்லே.

கம: அது சரி. இந்தக் கடிதத்தை இதுக்கு முந்தி படிச்ச ஞாபகமாவது இருக்கா?

ராமு: இரு....இரு....உங்க அப்பா ஒரு தடவை எனக்கு கடிகாரம் வாங்கித் தரேன்னு சொல்லிப்புட்டு 'டிமிக்கி' கொடுத்தார். அப்போ உனக்கு கோபமா....ஆமாம், ஆமாம் எழுதினேன். நீ கூட அசட்டுப் பிசட்டுன்னு ஒரு கடிதாசி பதில் போட்டே. நாலு பக்கம் வாஞ்சு வாஞ்சு எழுதியிருந்தியே?

கம: அந்த லெட்டரை வெக்கமில்லாம நீங்க எழுதின கட்டுரைன்னு வெளியிட்டுட்டு பேச்சு வேறயா?

ராமு : என்ன? என்ன? அந்த லெட்டரையா 'அற்புதன்' பத்திரிகையிலே முதல் கட்டுரையா போட்டுட்டா?

கம : என்கூட நீங்க இனிமே பேசவேண்டாம். எத்தனையோ சங்கடங்களை பொறுத்துண்டு வந்தாச்சு. என்னாலே இந்த அவமானத்தை பொறுக்கவே முடியாது. இனிமே ஒவ்வொருத்தர் என்னை துக்கம் கேக்க வருவா. என் மானம் போய்டும். நல்ல வேளை, அண்ணா வந்திருக்கான். அவனோடே நான் ஊருக்கு போய்ட்றேன்.

ராமு : கமலா, இப்போதான் ஞாபகம் வறது. கட்டுரை எழுத பேப்பர் ஆப்படல்லே. நீ அஞ்சு வருஷத்துக்கு முந்தி எனக்கு எழுதின அந்தக் கடிதாசி ஒரு பக்கத்திலேதான் எழுதியிருந்தே. அடுத்த பக்கத்திலே என் கதையை எழுதி அனுப்பிச்சேன். நீ எழுதியிருந்த பக்கத்தை கான்ஸெல் பண்ணி அடிக்கல்லே. என் போறுதகாலம், என் கதையைப் போடாதபடி, உன் கடிதத்தை அப்படியே போட்டுட்டாங்க.

கம : நீங்க பண்ணின பேப்பர் சிக்கனம் இந்த அனர்த்தத்திலே முடியணுமா? இனிமே நான் இந்த வீட்டிலே இருக்கவே மாட்டேன்.

ராமு : கமலா, கமலா, ஏதோ தவறு நடந்துடுத்து. 'அற்புதன்' ஆசிரியருக்கு ஒரு கடுதாசு எழுதிப் போட்டுட்றேன். இதுக்காக நீ வருத்தப்படாதே.

கம : அண்ணா படிச்சான்னா, என்ன நினைச்சுப்பான். உங்க சிக்கனம் நம்ப குடும்பத் தகராறை நடுத் தெருவிலே இழுத்துண்டு வந்துடுத்தே.

ராமு : அதெல்லாம் ஒண்ணுமில்லே. மாசாமாசம் பத்திரிகைகள் வந்திண்டிருக்கு. இதை எல்லாம் ஒருத்தரும் ஞாபகம் வச்சுக்கமாட்டா.

கம : அதோ அண்ணவே வந்துட்டான். அவனே சொல்லட்டும்.

சீனு : என்ன, ராமு இஞ்சி தின்ன குரங்கு மாதிரி உட்கார்ந்திருக்கான்?

கம : அண்ணு, நீயே சொல்லு. குடும்பம்னு ஆயிரம் இருக்கும். இதெல்லாம் போய் நடுச்சந்தியிலே இழுத்து விட்டா சாமர்த்தியம்னு?

சீனு : என்ன, கமலா பொருமருளே? ஏண்டா, ராமு, பதில் சொல்லேண்டா.

ராமு : இல்லேப்பா. ஏதோ தவறு நடந்துடுத்து. நான் ஒரு கட்டுரை அனுப்பிச்சேன். பேப்பர் ஆம்படல்லே. கமலா எனக்கு எழுதின கடிதத்துக்கு பிந்தியே, ஞாபகப்பிசகா கட்டுரையும் எழுதி அனுப்பிச்சூட்டேன். அந்த எடிடர் பிரகஸ்பதி அவ கடிதத்தை அப்படியே போட்டுட்டான்.

சீனு : சீனு, எடிடரை கோபிச்சுக்கறயே? உன் மூளே தான் அபாரம். பேப்பர் ஆம்படல்லே, நியாயம். கதையைத்தான் அவள் லெட்டருக்குப் பிந்தி அனுப்பிச்சியே? அவ கையெழுத்தையாவது அடிச்சு வைக்கக் கூடாது.

ராமு : என் போருத காலம்.

சீனு : அதுக்காக இப்படியா செய்யறது? கொஞ்சமாவது மூளேக்கு வேலே கொடுத்தா என்ன?

ராமு : சீனு, நீ என்ன நிபந்தனே வேணுமானுலும் கேளு. நான் கேக்கறேன். கமலா கோபம் தணிஞ்சாச்சரி.

சீனு : இனிமே பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதலேன்னு சங்கல்பம் பண்ணிக்கோ. அது போதும்.

ராமு : இனிமே அந்தப் பக்கமே போகமாட்டேன்.

கம : காகிதக் குப்பைகளை குவிக்கமாட்டேளே ?

ராமு : அதுவும் நானும் இனிமே ஜன்ம சத்ருக்கள்.

சீனு : வீணா தபாலுக்கு செலவழிக்கறதை பாங்கியிலே போட்டுவை. அது போராக மிஞ்சிடும். கமலா மனசு குளிர்ந்து வீடு கட்ட ஒரு பிளாட்டாவது வாங்கிப் போடலாம்.

ராமு : ஆபிஸ்லே வர பேப்பர்களுக்கு பிந்தி எல்லாம் அபூர்வ விநோதங்களை படிச்சுப் படிச்சு நான் சிரிச்சது போக, என் போறாத காலம், நான் கையாண்ட பேப்பர் சிக்கனம், என் பிழைப்பையே சிரிக்க வச்சுடுத்து.

# ஓட்டுக் குடித்தனம்

## காட்சி 1

சர்மா : (தூரத்திலிருந்து கையைத் தட்டி) கபாலி, டேய் கபாலி !

கபாலி : அட இவனு? எங்கே போனுலும் நிழலைப்போலே தூரத்திண்டு தூரத்திண்டு வந்துட்ருன்.

சர் : எங்கப்பா இத்தனை அவசரமா ஓட்றே?

கபா : நான்தான் ஓட்றேன்னு தெரியறதே. நீயேன் மூச்சு தெறிக்க விடாம தூரத்திண்டு வறே?

சர் : எல்லாம் உன் கவலைதான் எனக்கு. அப்புறம் வீடு ஏதாவது அம்புட்டுதா?

கபா : சர்மா, உனக்கு கோடி புண்ணியம் உண்டு. எதைப் பத்தி வேணுமானுலும் பேசு. வீடுன்னுமட்டும் பேச்சு எடுக்காதே. எனக்கு பத்திண்டு வறது.

சர் : சரி, சரி, நீ இருக்கற வீடு என்ன ஆச்சு?

கபா : நான் இப்போ இருக்கற இடத்துக்கு வீடுன்னு பெயரா? சர்மா! அதப்பத்தி ஒண்ணும் கேட்காதயேன்.

சர் : அப்பா, கோபத்திலே விச்வரூபம் எடுத்துடாதே.

கபா : அந்த வீட்டு எஜமானியை நினைச்சாலே பகீர்ங்கறது எனக்கு. காலகண்டின்னு, காலகண்டியப்பா அவ.

சர் : அவளைத் தெரியும்பா எனக்கு. ஆனு........

கபா: உங்களோடே எல்லாம் இரண்டு வார்த்தை பேசிப் புட்டா, உங்களுக்கெல்லாம் உச்சி குளிர்ந்து போய்ட்றது. பட்ற கஷ்டம் எல்லாம் நீயும் நானுமா? பாவம், விசாலத்தைப் பார்த்தா நமக்கு ஏண்டா ஊயிர் இன்னமும் இருக்குன்னு தோன்றது.

சர்: உன் மனைவி விசாலத்தைப்போல நல்ல பொண்ணு இந்த காலத்திலே எங்கேப்பா இருக்கா? தங்கமான பொண்ணு.

கபா: தங்கத்தையும் வெள்ளியையும் குப்பையிலே போடப்பா. விசாலம் என் வீட்லே இருக்கற எமகாதகிக்கு உழைச்சு உழைச்சு உயிரை விட்டுடு வாளோன்னு பயமாயிருக்கு.

சர்: என்னப்பா இது, வேடிக்கையா யிருக்கு? ஒட்டுக் குடித்தனம்னு அடிமை வாழ்வுன்னு அர்த்தமா?

கபா: கேளேன். விடியக்காலம்பர மணி ஆறு ஆகறதுக் குள்ளே, அம்மாவுக்கு காப்பி வேணுமா, காப்பி.

சர்: ஏன், தான் எழுந்து போட்டுக்கறது தானே?

கபா: அதைத் தானே நான் கேக்கறேன்.

சர்: அவ அம்மா ஊர்லே இல்லையா?

கபா: அவ ஊர்லே இருந்தபோதச் சொல்லு.

சர்: அறஞ்சாப்பிலே முடியாதுன்னு சொல்லிப்புடணம்.

கபா: நான் இதைக்கூட செஞ்சு பார்த்தேன். விசாலத்தை போர்வைக்குள்ளே மூடிப்புட்டு நானே காப்பிபோட உட்கார்ந்தேன்.

சர்: சபாஷ். சரியான பேர்வழி நீ.

கபா: கேளேன். காப்பி போட்டவுடனே எங்கேயிருந்தோ ஒரு டம்ளர் சமையலறையிலே ஆஜராச்சு.

சர்: யாரு கொண்டு வந்து........

கபா: அவசரப்படாதே. அதைக்கொண்டு வந்தவ அந்த காலகண்டிதான். 'தலைவலி தாங்கல்லே. இன்னிக்கு மட்டும் கொடுத்தூடுங்கோ. நாளைக்கு காப்பி கிளப்பி லேர்ந்து தருவிக்கிறேன்னு' ஆரம்பிச்சூட்டா.

சர்: அட கஷ்டமே!

கபா: அத்தனை காப்பியையும் கொட்டினேன்.

சர்: கீழேயா ?

கபா: இல்லே. அவகொண்டு வந்த........

சர்: டம்ளர்லேயா ?

கபா: டம்ளரா அது ? கழனித் தொட்டின்னு சொல்லு.

சர்: நல்ல பரோபகாரம்....ம்!

கபா: இதோ பார் சர்மா! இதுதான் என் முடிவான தீர்மானம். இனிமே அந்த வீட்டிலே ஒரு நொடியும் இருக்க முடியாது. நாளைக்கே கிளம்பப் போறேன்.

சர்: எங்கே ?

கபா: எங்கேயாவது ?

சர்: அப்புறம் வீடு ?

கபா: வீடா ? மரத்தடியிலே இடமா இல்லை ?

சர்: கபாலி, உனக்கோசரம் இந்த இரண்டு மாசத்திலே இரனூறு வீடு பாத்தாச்சு. ஒரு அடின்னு ஒரு அடி கூட இல்லே.

கபா : இல்லேன்னு சொல்றமே ஒழிய, வண்டியிலே சாமான்கள் அங்கே இங்கேயும் சஞ்சாரம் பண்றது என்னமோ ஒரு நிமிஷம்கூட இல்லாமலில்லே.

சர் : அது அவாளவா ராசி. நமக்கு எங்கே போனாலும் அபஜயமா இருக்கே. அதைச் சொல்லு.

கபா : நான் கெஞ்சாதவா பாக்கியில்லே. விடிமோக்ஷமே இல்லே போலிருக்கு.

சர் : இரு, இரு, அங்கே யார் வரு?

கபா : என் மாதிரி ஒரு துர்ப்பாக்கியவானா இருக்கும்.

சர் : இல்லே. அவனே எங்கேயோ பார்த்தாப்பிலே இருக்கு.

கபா : ஆசாமி ரொம்ப குஷியிலேதான் இருக்கார்.

சர் : குஷியா? கபாலி, கவலையை விட்டுடு. இன்னிக்கு நீ நரி முகத்திலேதான் முழிச்சிருக்கே.

கபா : என்ன சொல்லேன்?

சர் : அவன் முகத்தைப் பார். ஒரு தனி ஒளி பிரகாசிக்கிறது பார். அது என்ன தெரியுமா?

கபா : எனக்கென்னமோ?........

சர் : நீ ஒரு கிணத்துத்தவளே. வீடு கிடைச்சவா முகத்திலேயே இந்த மாதிரி சந்தோஷம்தான் காண்றது இப்போதெல்லாம். நான் சொல்றதை ஞாபகம் வச்சுக்கோ. இந்தக் காலத்திலே எவனாவது ஒருத்தன் ரொம்ப சந்தோஷமா இருந்தான், உடனே இதான் காரணம்னு ஒரு முடிவு கட்டிடு, ஆமாம்.

கபா : சர்மா, உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. அவனே எப்படியாவது மடக்கி எனக்கு ஒரு ரூமாவது கொடுக்கும்படி செஞ்சுடேன்.

சர்: அவனும் வந்தூட்டான். ஹல்லோ.... குட்மார்னிங் ....மிஸ்டர்....மிஸ்டர்....

அனந்தன்: அனந்தன்.

சர்: பார்த்தீங்களா! வரவர ஞாபக மறதி ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு. உங்களை காக்காத்தோப்பிலே அடிக்கடி பார்த்திருக்கேன்....

அன: நான் அங்கே இல்லேயே.

சர்: இல்லே அது கிட்டக்க....

அன: நான்....

சர்: வரவர அசாத்திய மறதியாய் போயிடுத்து. உங்களை அடிக்கடி பார்த்திருக்கேன்.

அன: அடிக்கடியா? நான் இந்த ஊருக்கு வந்து....

சர்: அடாடா! நன்னாகச் சொன்னேள். ஏழு வருஷமா எத்தனை தடவை பார்த்திருக்கேன்.

அன: நான் வந்து ஏழு நாள்கூட ஆகல்லயே?

சர்: ஓ, இப்போதான் ஞாபகம் வரது. உங்க face ரொம்ப familiarஆ இருக்கு. இல்லே, ஒரு வேளை உங்க ப்ரதர் இந்த ஊர்லே....

அன: அவர் இல்லே....

சர்: இல்லே ஸார். எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு. சர்மாவுக்கு தெரியாத ஆள் இந்த உலகத்திலே உண்டா?

அன: இல்லே, மிஸ்டர் சர்மா, எனக்கு ப்ரதரே கிடையாதே.

சர் : உங்க சாயல்லே ஒருத்தர் இருந்தார், ஸார். அந்த ஞாபகத்திலே....

அன : நான் ரொம்ப அவசரமா போறேன்.

சர் : நாங்களும் ஒரு அவசர காரியமா வந்திருக்கோம்.

அன : என்ன சொல்லுங்கோ நேரமாச்சு. எனக்கு time waste பண்ண நேரமில்லே.

சர் : உங்ககிட்டே ஒரு ஆப்ளிகேஷனுக்கு வந்திருக்கோம்.

அன : என்னாலே என்ன செய்றதுக்கு இருக்கு சொல்லுங்கோ.

சர் : என்ன அப்படிச் சொன்னேள்? அகத்தின் அழகு முகத்திலே இல்லையோ? நம்பின நம்புங்கோ, நம்பாட்டா போங்கோ. தூரத்திலேர்ந்து பார்க்கச்சயே எனக்கு தெரிஞ்சுடுத்து. உங்க நல்ல மனசும், பெருந் தன்மையும், பரோபகாரத் துடிப்பும்........

அன : என்ன ஸார்! உலகத்திலே எது ஸார் நிச்சயம்? இருக்கறமட்டும் ஏதோ, நம்மாலான உபகாரம் பிறத்யாருக்கு........

சர் : ஹூம்! அதைத்தான் சொல்ல வறேன். சொன்னேளே. இதெல்லாம் நூத்திலே ஒரு பேச்சு. இந்த காலத்திலே எல்லாம் குளம் வெட்ட வேண்டாம். கோயில் கட்ட வேண்டாம். நமக்கு கிடைச்ச வீட்டிலே ஒரு ரூமோ கொஞ்ச இடமோ ரொம்ப தவிக்கிறவாளுக்கு வாடகைக்கு விட்டால் போறும், ஸார். வீடு தானம் விட பெரிய தானம் இந்தக் காலத்திலே எது சொல்லுங்கோ? தெரியாமத்தான் கேக்கறேன்.

அன : என்ன, ஸார், பிரமாதம். எனக்கும்தான் ஒரு வீடு நாளையிலேர்ந்து ஆம்புட்டிருக்கு.

சர்: என்ன? நாளையிலேர்ந்தா?

அன: மூர்ச்சை போட்டுடாதீர். மூணே ரூம்தான். தொண்ணூறு ரூபாய் வாடகை.

சர்: தொண்ணூறு ரூபாயா? ஆயிரம் ரூபாய் சம்பளக்காரனே ஆயிரம்தரம் யோசிப்பானே, வாடகை கொடுக்க.

அன: இந்தக் காலத்திலே நம்முதுன்னு இடம் இல்லாட்டா என்ன ஸார், பிரயோசனம்?

சர்: சொன்னேளே? சரியான பேச்சு. ஆனா தொண்ணூறு ரூபா உங்க ஒருத்தராலேயே முடியாதே.

அன: அதைத்தான் நானும் முதல்லே யோசிச்சேன்.

சர்: அதைத்தான் நானும் சொல்ல வறேன்.

அன: உங்களுக்கு ஏதாவது இடம் வேண்டி யிருக்கோ?

சர்: நன்னாக் கேட்டேள். அதோ பாருங்கோ!

அன: எதை?

சர்: அந்த மரத்தைத்தான்.

அன: ஆமாம். அதுக்கென்ன?

கபா: அதன் கீழே நாளைக்கே முகூர்த்தம் தவறாதபடி குடியேறிப் போறதாக தீர்மானிச்சுட்டோம்.

அன்: யாரு?

கபா: நான்தான்.

அன: என்ன, ஸார், விளையாட்றேளா?

கபா : வீடு மாத்தறதிலே விளையாட்டென்ன, ஸார்?

சர் : இதோ பாருங்கோ, அனந்தன், தெருவா யிருக்கேன்னு பார்க்கறேன். இல்லாட்டா சாஷ்டாங்கமா நமஸ்காரம் பண்ணி வேண்டிக்கத் தயார்.

அன : என்ன அபசாரம்! என்ன அபசாரம்!

சர் : நீங்க இந்த உபகாரம் பண்ணினு உங்களே நாங்க மறக்கவே மாட்டோம்.

அன : ரூமு மூணுதானே இருக்கு. வேணும்னு ஒரு ரூம் தறேன்.

கபா : என்ன, ஒரு ரூமா?

சர் : ஸார், இப்படி திடீர்னு சொன்னு கபாலியின் ரத்த ஓட்டமே நின்னுடும், ஸார்.

கபா : நிச்சியமாவா? நிச்சியமாவா?

அன : ஒரு ரூம்தான் தருவேன்.

சர் : வாடகை?

அன : வாடகைக்கென்ன. பணம் ஓடியாப் போய்டும்.

சர் : அதுக்கில்லே, முந்தியே தெரிஞ்சிண்டுட்டா....

அன் : எனக்கெல்லாம் அதிக ஆசை கிடையாது. ஏதோ மாசம் ஐம்பது ரூபாய் கொடுங்கோ போறும். நான் அதிகமா கேக்கல்லே.

சர் : ஒரு ரூமுக்கு ஐம்பது ரூபாய்........

அன : ஸார், இங்கே ஒண்ணும் அடிதடியில்லே. நான் போறேன். என்னை விட்டுடுங்கோ.

கபா : சர்மா, பரவாயில்லே. கொடுத்தூடலாம்.

அன : அப்புறம் மனக்கசப்பு கூடாது. நாளைக்கே வந்தூடுங்கோ. நாலாம் நம்பர், நாகபுரம்.

சர் : உங்களுக்கு அதைப்பத்தி சம்சயமே வேண்டாம். விடியற்காலம்பரவே வந்தூடுவார்.

(அனந்தன் போகிறார்)

கபா : பேச்சுத்தான் பலமாயிருக்கு. ஆளு கஞ்சன் போலிருக்கு.

சர் : கபாலி! பேசாமப்போ. வீடு அகப்பட்டுதேன்னு சந்தோஷப்படாம, மாட்டின் பல்லே பாக்கறயே.

கபா : ரொம்ப தாங்க்ஸ் சர்மா. இந்த உபகாரத்துக்கு உன்னை மறக்கவே மாட்டேன். வீட்டுக்கு அடிக்கடி வந்திண்டிருக்கணும்.

சர் : விசாலம் போட்டுத்தற காப்பியை வாரத்துக்கு ஒரு தடவையாவது வந்து சாப்பிட்டுட்டுப் போக வேண்டாமா?

## காட்சி 2

விசாலம் : நல்ல வீடு பார்த்தேள்? என்னாலே இனிமே ஒரு நிமிஷம்கூட இங்கே இருக்க முடியாது.

கபா : இப்படி திடுதிப்புன்னு ஒரு தீர்மானத்தை வீசி எறியறயே?

விசா : நீங்களும் பார்த்திண்டுதானே இருக்கேள். என்னாலே இத்தனை கஷ்டத்தையும் சகிக்கவே முடியல்லே.

கபா : விசாலம், விசாலம், மெள்ளப் பேசேன். பெரியவர் இருக்கிறார். அதுக்கு பாம்புச் செவி. அப்புறம் நமக்கே ஆபத்து வந்துடும்.

விசா : அப்போதாவது விமோசனம் ஏற்படாதா ?

கபா : ஒவ்வொருத்தர் பட்ற கஷ்டத்தை எல்லாம் பார்த்தூட்டும் இப்படிப் பேசறயே ? நீயும்தான் பார்த்தே. எத்தனை திண்டாடினேம். எல்லாத்தையும் இத்தனை சீக்கிரம் மறந்தூட்டா ?

விசா : உங்களுக்கென்ன பேசுவேள் ? பட்டாத் தெரியும். வீட்டுக்காரி ராணி மாதிரி கிளம்பிட்டு.

கபா : எங்கே ?

விசா : வாக்கிங்தான். வீட்லே அவ ஒரு நிமிஷம் இருந்தாத் தானே.

கபா : உனக்கென்ன ?

விசா : எனக்கென்னவா ? பால்க்காரன் வருனென்னு காத்துண்டு நிக்கறதும், அவன் வந்ததும் வராததுமா, பாலைக்காச்சறதும், வாசக்கதவை திறக்கறதும், மூடறதும் வீட்டுக்கு காவக்காரி மாதிரி இருக்கறதும்— எல்லாம் நீங்க செஞ்சாத் தெரியும்.

கபா : கஞரா முடியாதுன்னு சொல்லிப்புடு. இதிலே கருணை என்ன ?

விசா : நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். என்னலே முடியவே இல்லை. அதுவும் குழாயடி அவளுக்கு ஸ்வீகாரமா ?

கபா : இதோ பாரு, விசாலம், இந்த வீடும் போச்சுன்னு நம்ப தேசாந்திரத்துக்கு கிளம்ப வேண்டியதுதான்.

விசா: அது சரி, அந்த மனுஷன் கட்டிலே கொண்டு வந்து நடு வழியிலே போட்டுட்டுரே? கொஞ்சம் நகர்த்திப் போடுன்னு சொல்லப்படாது?

கபா: ஏதாவது சொன்ன நம்மையே வீட்டிலேர்ந்து நகர்த்திப்புட்டா?

விசா: இப்படி பயந்துண்டு பயந்துண்டு நடந்தா, அவ்வளவுதான். எடுத்தார்க் கைப்பிள்ளையாப் போக வேண்டியதுதான். (வயலினில் அபஸ்வரம் கேட்கிறது) இது வேற எனக்கு! எல்லாரும் வயலின் வாசிக்க கத்துப்பா. ஆனா எடுத்த எடுப்பிலேயே ச்ருதி பேதம் இத்தனை இலகுவிலே யாருக்கு வரும்?

கபா: உனக்கு இத்தனை வாய் கூடாது. ஏதோ அந்த அம்மா வயலினையாவது வாசிக்கறா. வாயைத் திறந்து பாடாமா இருக்காளே. அதுக்கு சந்தோஷப்படு.

விசா: அது ஒண்ணுதான் பாக்கி. வீட்டுக்காரன்னா சர்வாதிகாரின்னு அர்த்தமா?

கபா: நம்ப போறாதகாலம். இடமே இல்லே பாரு. (இருமல் கேட்கிறது).

விசா: எனக்கு இந்த கிழத்தினுடைய ஹிம்சை சகிக்க முடியல்லே.

கபா: விசாலம்! அதுக்கு பாம்புச்செவி. மெள்ளப் பேசு. மெள்ளப்பேசு. அப்புறம் நமக்கு ஆபத்து வந்துடும்.

பெரியவர்: (தூரத்தில்) அனந்தா, அனந்தா! நான் போறேம்மா (இருமல்).

அன: என்ன அப்பா!

பெரி: நான் இந்த வீட்டிலே இருக்கறது, குடியிருக்கிற அம்மாமிக்கு பிடிக்கல்லையாம். நான் போறேன். எனக்கு இடமா இல்லை? கிராமத்திலே போயி........ ஹாயா........(இருமல்) காத்து வாங்கணும்....இந்த இருமல் என்னைக் கொல்றதே.

அன: யாரு? அவளா சொன்னா? அப்படி சொல்ற பொண்ணு எனக்குத் தெரியல்லையே?

பகவதி: அவளுக்குப் பரிஞ்சண்டு வந்தூட்டேளா?

அன: பரிஞ்சண்டா? பகவதி! சமாசாரம் என்னன்னு தெரிஞ்சுக்காம........

பக: நானும் பாக்கறேன். பொறுத்துப் பாத்தாச்சு. அவாளவா தங்க நிலைமையை அறிஞ்சு பேசணும். வாய அடைச்சுண்டிருக்கணும். முடியாட்டா வெளியே போய்டணும்....ஓண்ட வந்த பிடாரி....

விசா: பாருங்கோ! நீங்களே கேளுங்கோ. உங்க காதிலே விழறதா?

கபா: விசாலம்! விசாலம்! வாயை மூடிண்டிறேன்.

விசா: நான் ஏன் சும்மா இருக்கணும்! நான் என்ன வாய் இல்லாப் பூச்சியா? அடிமையா?

பெரி: அப்பா, அனந்தா! என்னாலேதான் உனக்கு இத்தனை கஷ்டமும். நான் கிராமத்துக்குப் போய்ட்றேன். அங்கே விச்சு இருக்கான். காவேரியிலே வேஷ்டியைத் தோச்சுப்போட்டுடுவான். ஏதோ இரண்டு வேளை சாப்பாடு சாப்பிட்டுண்டு என் போதை போக்கிப்புட்றேன்.

அன: அப்பா! இப்படி எல்லாம் சொல்லாதங்கோ. எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு.

பக: பெரியவர் சொல்றதுதான் சரி. நானும் அவரோ

டேயே கிளம்பிட்றேன். என்னாலே இந்த வீட்லே இருக்க முடியாது.

அனு : என்ன கஷ்ட காலம்டா இது. ஒட்டுக் குடித்தனமே கூடாது.

பக : நான்தான் அப்பவே தலையிலே அடிச்சிண்டேனே, கேட்டேளா ?

அனு : இப்படி எல்லாம் ஆகும்னு யார் நினைச்சா ?

விசா : பகவதி, வாயை அடக்கிப்பேசு. நானும் ரொம்ப ரொம்ப பொறுத்துப் பார்த்தாச்சு. வரம்பு மீறிப் போறே.

பக : பார்த்தேளா, அவ துடுக்கை?

கபா : விசாலம், விசாலம். நீ உள்ளே போகமாட்டே?

விசா : (அழுது) உள்ளேயா போகணும். நான் வெளியே போய்ட்றேன். நானும் இவா பண்ற கூத்தையும் அடிக்கற லூட்டியையும், பல்லைக்கடிச்சுண்டு பொறுத்துப் பாத்தாச்சு. என்னாலே மாளல்லே.

பக : யார் கூத்தடிச்சா ? யாரு லூட்டி பண்ணினா ?

பெரி : (இருமல்) சண்டை போடாதங்கோளேன்.

விசா : நானா சண்டை போட்றேன்? குழந்தையையும் கிள்ளிவிட்டுட்டு தாலாட்ட வந்துட்டார்.

அனு : (கோபமாய்) மிஸ்டர் கபாலி ! நீர் பண்றது நன்னாயிருக்கா ?

கபா : ஸார், உபதேசம் போறும். ஏதோ தெரியாம வந்துட்டேன். இத்தனை மோசம்னு தெரிஞ்சிருந்தா உம்மை மூஞ்சியிலேகூட முழிச்சிருக்க மாட்டேன்.

அனு : கபாலி, மரியாதையாப் பேசுங்கோ. உம்மை வீட்டுக்குள்ளே விட்டதே தப்பு. என் புத்தியை....

கபா: வீடு படைச்சுட்டோம்னு ரொம்ப துள்ளா தங்கோ. நீர் மட்டும் ஒவியமில்லே.

அன: அத்தனை தைரியமா உனக்கு? ஹூம். அத்தனை தைரியமா? இடத்தை கொடுத்தா மடத்தையா பிடுங்க வறீர்? ரோஷமுள்ள மனுஷனாயிருந்தா, மான மிருந்தா, போம் வெளியே. இப்போதே போய்டும். நான் கழுத்தைப்பிடிச்சு வெளியிலே தள்ளணும்னு வச்சுக்கவேணும். ஆமாம்!

பக: வெளியிலே தள்ளிப்புட்டு மறுகாரியம் பாருங்கோ.

விசா: எனக்கு அப்பவே தெரியும். கேட்டேளா?

கபா: ஷட் அப் மரியாதையாப் பேசும். உம்மைப் பேசிக் கற இடத்திலே பேசிக்கறேன். வார்த்தையை ரொம்ப செலவழிச்சுடாதேயும்.

முதலியார்: (ஓடிவந்து) போறும், போறும், போறும். இதென்ன வீடா? சந்தையா?

அன: நீங்களே கேளுங்கோ.

கபா: நீங்களா சொல்லுங்கோ.

முத: என்னத்தைச் சொல்றது? வேலியே பயிரைத் தின்னு! ஏ அனந்தய்யா! இப்படி கூச்சல் போட்டீங் களே? நியாயமா? வெளியிலே போய் பாருங்கய்யா. திருவிளா மாதிரி வீட்டு வாசல்லே கும்பல் வந்து சாஞ்சிடுச்சி. என்ன காட்டு கத்தலய்யா!

பெரி: (இருமிவிட்டு) முதலியார்வாள், (இருமல்) முதலி யார்வாள்!

முத: பெரியவரே, நீங்க சும்மாக்கிடங்க.

பெரி: இல்லே. ஏதோ தெரியாத்தனமா சண்டை போட் டுக்கிட்டாங்க.

முத: நான் இவங்க சண்டையை விலக்க வரல்லே அய்யா. ரெண்டு பேரையும் வீட்டை விட்டு கிளப்ப வந்திருக்கேன். ஆமாம். நம்ப பெயர்லே அடிபடுது.

பெரி: ஏதோ தவறு நடந்தூடிச்சி. இனிமே நடக்காது. பெரிய மனசு பண்ணுங்கோ.

முத: நம்பபோல பெரிய மனுசங்களுக்கு ஒருத்தரும் புத்தி சொல்ல தேவை இல்லீங்க.

பெரி: அது இல்லேன்னு சொல்லவரல்லே, முதலி யார்வாள்.

முத: பின்னே என்னங்க! நீங்களே சொல்லுங்க. ஒருத் தரும் இப்படி சண்டை போட்டு நான் பாத்ததே இல்லீங்க.

பெரி: இதிலே ரெண்டு பேரும்தான் சண்டை போட் டாங்க.

முத: இதெல்லாம் நடவாது. இவர் சொன்ன சொன் னதுதான். ஆமாம்.

பெரி: அப்படின்னு?

முத: கிளம்ப வேண்டியதானுங்க. மறுபேச்சு நம்ப கிட்டே எல்லாம் கிடையாது.

அன: முதலியார்வாள்! இனிமே........

முத: உங்க பேச்செல்லாம் தண்ணியிலே எழுத வேண்டி யதுதான்.

அன: இந்தத் தடவை........

முத: நான் வீணுப்பேசி தொண்டத் தண்ணியை செல வளிக்க மாட்டேன். இன்னிக்கு சாயந்திரத்துக் குள்ளே வேற வீடு பாத்துக்கோங்க. அந்த கண்டிசன் பேர்லே வந்திங்க. முதல்லே வெளியிலே போய் டுங்கோ. சாயந்திரமே. ஆமாம். கண்டிப்பா.

அன : என்னப் போறுத காலம்டா இது ?

## காட்சி 3

சர் : டேய் பழி, என்ன பறிகொடுத்தவன் மாதிரி உட்கார்ந்திருக்கே?

கபா : சர்மா, வயித்தெரிச்சலைக் கிளப்பாதே. உன் வார்த்தையைக் கேட்டு, இங்கே வந்தது இத்தனை தூரத்துக்கு வந்தூடுத்து.

சர் : என்ன ? சொல்லித்தொலை.

கபா : இதான் சமாசாரம். இன்னிக்கு சாயந்திரம் வீட்டைவிட்டு வெளியே போகணும். அதான் விஷயம்.

சர் : அட கஷ்டகாலமே! இந்த புது வீட்டு ஒண்டிக் குடித்தனத்துக்குமா தலைவலி?

கபா : சர்மா, தலைவலி போய் திருகுவலி வந்தூட்டது அப்பா. வீட்டுக்காரனே வந்து சொல்லிப்புட்டான். நானும் அனந்தனும் சண்டை போட்டூண்டோம். அந்த ரகளையை அவனே நேர வந்து பாத்துட்டான். வேறு வழியே யில்லை.

சர் : முதலியார்தானே ?

கபா : அவர்தான்.

சர் : வாயை மூடிண்டு நடக்கறதை கவனி.

கபா : எங்கேடா போறே !

சர் : போகச்சே கூப்பிடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது ?

கபா : ஈச்வரோ ரக்ஷது.

## காட்சி 4

சர் : என்ன மிஸ்டர் அனந்தன், நேரம் ஆய்டுத்தே, வீட்டைக் காலி பண்ணிப்புட்டு போகலாமே!

அன : ஏன்? உங்க பிரெண்ட் கபாலிக்கும் அதை ஞாபகப் படுத்துங்கோ.

சர் : சரி, ஸார், உங்க விஷயத்தை கவனிங்கோ.

அன : ஏன், அவருந்தான் வெளியே போகவேணும்.

சர் : மிஸ்டர் அனந்தன், வீடு நம்முது.

அன : என்ன, உங்களுதா?

சர் : ஆமாம், ஸார், ஆமாம். முதலியாரைக் கண்டு வாடகை நூறு ரூபாய்க்குப் பேசி நானே எடுத்துண்டுட்டேன். நான் இருக்க இல்லே. இந்த வீடு முழுக்க இனிமே கபாலியின் கன்ட்ரோல் கீழேதான்.

அன : மிஸ்டர் சர்மா, உங்களுக்கு ரொம்ப புண்ணியம் உண்டு. என்னே இந்த வீட்டை விட்டு விரட்டாதங்கோ. அப்போ நான் உங்களுக்கு வீடு கொடுக்காட்டா, எத்தனை கஷ்டம் வந்திருக்கும்? இனிமே நாங்க மூச்சு பேச்சு காட்ட மாட்டோம். வாடகை வேணும்னு ரூபாய் அறுபது கொடுத்துட்றோம்.

சர் : நீர் நம்பகிட்டே ஒட்டுக் குடித்தனம் நடத்தறீங்கற ஞாபகம் வச்சுண்டிரும். அது ஒண்ணே போறும். என்னு கபாலி?

அன : ஊம், என் போறுதகாலம்.

---

# குமாஸ்தா கந்தசாமி

## காட்சி 1

கந்தசாமி: டேய், மாணிக்கம், போறண்டா, போறம். ஏது ஆளேயே மூடீடுவே போலிருக்கே!

வெங்கிட்டு: ஆளைப்பாத்துதான் அவனும் செய்யறுன்.

மாணிக்கம்: என்ன எசமான். நம்பளுக்கு சொல்ல வறீங்களே. குட்டேலே ஊறின மட்டே, நானு.

வெங்: டேய், உன் ப்ரதாபத்தை கால வேளையிலே ஆரம்பிச்சூட்டே இல்லே. இனிமே பொழுது சாயற மட்டும் முடிக்கிவிட்ட கிராமபோன் மாதிரி திரும்ப திரும்ப....

கந்த: அவனே விட்டுத்தள்ளுங்க, வெங்கிட்டு. வயசானவுங்களே அப்படித்தானே.

மாணி: என்ன எசமான், அப்படிச் சொன்னீங்க? வயசாக வயசாகத்தானுங்க நம்பளுக்கெல்லாம் பவுரும் உயரும்.

கந்த: இத்தனே பைல்(file)களேயும் என்கிட்டே ஏண்டா தள்றே. அந்த ஐயா டேபிள்ளே கொஞ்சம் வை.

மாணி: என்னங்க? அவுரு டேபிள்ளேங்களா? குசாலா வைக்கிறேன். எனக்கு என்னங்க? அப்புறம் கயிஷ்டப்பட வேண்டிவன் நானில்லேங்க.

வெங்: மிஸ்டர் கந்தசாமி, மாணிக்கம் சொல்றது வாஸ்தவம்தான். அருணசலம் நேத்திக்குத்தான் நம்ப ஆபீஸ்லே ஜாயின் (join) ஆயிருக்கார்.

அருணா: ஆமாம் ஸார். நீங்க செய்யுங்க. அதப்பார்த்து கிட்டு அப்புறம் வேணா....

கந்த: மாணிக்கம், எல்லாத்தையும் இங்கே வச்சிட்டு போடா.

மாணி: அதத்தான் நானும் அப்பவே சொன்னேனுங்க.

கந்த: பேனாவை கையிலே பிடிச்சு வேலையை ஆரம்பிச் சேனு, இந்த 'பைல்'கள் எல்லாம் சடசடன்னு சிற கடிச்சுண்டு பறக்காதா?

வெங்: அருணாசலம், நம்ப கந்தசாமியை என்னான்னு நினைச்சுகிட்டே? ஆளை பார்த்தூட்டு இவ்வளவு தானுன்னு நினைச்சுக்கப்படாது. கடுகு சிறுத்தாலும் காரம் அதிகம்பா? அதிகம்.

கந்த: உசரமா வளர்ந்தூட்டா வேலையிலே கெட்டிக் காரன்னு அர்த்தமோ? என்னங்க, வாஸ¯ப் பிள்ளையும் தான் விழுந்து விழுந்து வேலே பண்ருரு. ஒரு வரி விடாம வந்த பேப்பரை எல்லாம் வாய்விட்டு படிச் சூட்டா, வேலையிலே புலி ஆய்டுவாங்களா? மானே ஜர் கண்ணிலே மண்ணைப் போட்டுட்டாப் போறாங் களா? மனச்சாக்ஷின்னு ஒண்ணு இருக்குதுங்க. அது திருப்தி அடையணும். என்னங்க நான் சொல்றது?

வெங்: அருணாசலம், கவனி, கவனி. கந்தசாமியை என் னன்னு நினைச்சுகிட்டே. ஒவ்வொரு வார்த்தையிலும் ஒரு புதையல் வச்சுத்தான் பேசுவார்.

கந்த: வெங்கிட்டு ஸார், ரொம்ப தூக்கி விடாதங்க.

வெங்: தூக்கிவிட்றதா? நன்னாச் சொன்னீங்க. நம்ப பாலிஸீ உங்களுக்குத் தெரியாதா? கால் எ ஸ்பெட் எ ஸ்பேட். (call a spade a spade).

அரு: கெட்டிக்காரங்களே இப்படித்தான். தங்களப்பத்தி யாராவது புகழ்ந்தா, அவங்களுக்கு பிடிக்கறதே இல்லே. நானும் ரொம்ப இடத்திலே பார்த்திருக்கேன்.

கந்த : என்ன கெட்டிக்காரத்தனம் போங்க. குப்பையிலே தள்ளுங்க. இந்த கம்பெனிக்கு நான் என் உசிரையே கொடுத்திருக்கேனுங்க.

வெங் : ஒரு தடவையா ? பலதடவை யில்லே?

கந்த : உங்களுக்குத் தெரியாததில்லே. நானும் இருபது வருஷமா இங்கே உசிரை விட்டுக்கிட்டு இருக்கேன். வேறு எங்கேயாவது வேலை செஞ்சிருந்தேன்னு இப்போ 'டாப்' லே இருப்பேனுங்க.

அருணா : ஏன் அப்படி ?

வெங் : அருணாசலம், ஏதாவது கேள்வி கேட்டு கந்தசாமி வயித்தெரிச்சலை கிளப்பாதே. நம்ப கம்பெனி ஆரம் பிச்சதிலிருந்து இருக்கார் அவர்.

கந்த : இன்னிக்கு நம்ப கம்பெனியை தலை தூக்கி நிக்க வச்சது இந்தக் கைதானுங்க. இவர் எத்தனை பேரை பார்த்திருப்பார்!

வெங் : இதெல்லாம் ப்ரதர், அவங்க அவங்க பிறந்த வேளை.

கந்த : அதுக்கு சொல்லவரல்லே, ஸார். அவன் எழுதின எழுத்தை ஒருத்தராலும் அழிக்க முடியாது. அது கிடக்குது. அட இம்புட்டு ஸர்வீஸ் ஆள்கிட்டே எம் புட்டு மரியாதை காட்டணம், என்னங்க • நான் சொல்றது ?

மாணி : அவுக கிடக்கிறாக. நான் இருக்கேனுங்க உங்களை லச்சியம் பண்ண.

கந்த : நீ சும்மாயிருடா. எதுக்கும் ஸம்மன்ஸ் இல்லாம ஆஜர் ஆயிட்டான்.

மாணி : இல்லீங்க. ஒரு பேச்சுக்கு சொன்னேன்.

கந்த: ஒரு பேச்சோடே நீ நின்னு பாதகமில்லையே. இடத்தைக் கொடுத்தா மடத்தையல்லே பிடுங்கிடுவே.

மாணி: என்னங்க, நம்பளப்பாத்தா அப்படிச் சொன்னீங்க? நீங்க எப்போ எனக்கு இடத்தை கொடுத்தீங்க? நான் எப்போ உங்க மடத்தை பிடிங்கினேன்?

வெங்: டேய், மாணிக்கம். ஜில்லுன்னு ஒரு டம்ளர் தண்ணி கொண்டா. சீக்கிரம். கச்சாத்தை வரிஞ்சு கட்டிக்கிட்டு அப்புறம் மல்யுத்தத்துக்கு வரலாம்.

மாணி: (போய்க்கொண்டே) தப்புத்தண்டாக்கு போற ஆளு மாணிக்கமா? வாய்கூசாம பேசாதீங்க.

கந்த: ம்....நான் என்ன சொன்னேன்?

அருணு: உங்க ஸர்வீஸை ஒருத்தரும் மதிக்காம....

வெங்: மதிக்காம இல்லே, ப்ரதர். அதற்குத்தகுந்த மரியாதை....இல்லே. சன்மானம்....

கந்த: அதெல்லாம் உலக இயல்புதானே. கஷ்டப்பட்றவன் ஒருவன். அதற்குப்பலன் ஒரு சோணகிரிக்கு. நீங்களே பாருங்க. நான் இந்த ஆபீஸுக்கு ஒரு நாள் வறல்லே, அவ்வளவும் நின்னுக்கிடும்.

வெங்: என்ன, கந்தசாமி. ஸர்வீஸுக்கு அத்தனை மதிப்பு இல்லாட்டா, அப்புறம் என்ன இருக்கு.

கந்த: நான் விளையாட்டுக்கு சொல்லலீங்க. ஒரு வேலைன்னு ஒரு வேலை நடக்காது. இவ்வளவு பேசறானே இந்த மாணிக்கம். என் தலை மறஞ்சது, இந்த மாணிக்கம் பயலை கட்டிப்பிடிக்க முடியாது. ஆபீஸ்லே தலை காட்ட மாட்டான் பயல்.

வெங்: ஆமாம், ஸார். இவனை மேய்ச்சுக் கட்ட ஒருத்தராலும் முடியாது. நான்னு அந்தப் பயலுக்கு கிள்ளுக்கீரை. இதோ பாருங்க. ஒரு நாள் என் மகளுக்கு

உடம்பு சரியாயில்லே. போய் மருந்து வாங்கிண்டு வாடான்னு அனுப்பிச்சேன். எப்போதும் தூங்கி விழற மானேஜர், குடி முழுகி போய்ட்டாப்போலே, காலிங் பெல்லெ உடைக்க ஆரம்பிச்சார்.

அருணு: போன மாணிக்கம் போனவன்தானு?

வெங்: அடுத்த நாள் காலே ராஜ பார்ட்டு மாதிரி ஆபீஸுக்கு வருன். வருனே! மருந்து வாங்கிண்டு வந்தானு? அதுவும் இல்லே. ஏண்டா நேத்திக்கு அத்தனே நேரம்னு கோபிச்சண்டா, நேரே மானேஜர் கிட்டே போய் கர்ம சிரத்தையா கோழ்சொல்லி, நம்மை கால வாரி விட்டுட்டான், ஸார்.

கந்த: வெங்கிட்டு, நீங்க என்னவேணும்னு சொல்லுங்க. நம்ப காரியத்தை நம்பதானுங்க செய்யணும். பிறத்தி யாரை நம்பினு திரிசங்கு ஸ்வர்க்கம்தான்.

மாணி: இந்தாங்க தண்ணி.

கந்த: ஏண்டா, மானேஜர் வந்துட்டாரா?

மாணி: அவருக்கென்ன? குசாலா ஒருமணிக்கு வருவாரு. நம்ப ஒரு நாளு லேட்டா வந்தா சள்ளு புள்ளுன்னு மேலே விளுவாரு.

கந்த: நான் எங்கேயோ ஆரம்பிச்சு எங்கேயோ பாஞ்சுட்டேனே?

அரு: நீங்க ஒரு நாளு வராட்டா ஆபீஸ் குடைசாஞ்சுடும்னு ஆரம்பிச்சீங்க.

கந்த: சேசே, நான் என்ன கோபுரத்து பொம்மையா? அப்படி இல்லீங்க. ஒரு பேச்சுக்கு சொல்ல வந்தேன்.

வெங்: ப்ரதர், அந்த சமாசாரத்தைச் சொல்லுங்கோ.

கந்த: அதுவா? வேணும், ஸார். அருணசலம் புதுசு. ரொம்ப காப்ரா ஆயிடப் போறரு.

அரு: சும்மா சொல்லுங்க.

கந்த: நம்பளை அட்டை மாதிரி இந்த குமாஸ்தா உத்தியோகம் ஒட்டிக்கிட்டு இருக்கேதவிர, நம்பளுக்கு எங்கேபோனலும் மரியாதைக்கும் கெடுபிடிக்கும் குறைவில்லே.

வெங்: அந்த மேலூர் சமாசாரத்தைச் சொல்லுங்க.

அரு: சொல்லுங்க. கேக்க ஆவலாயிருக்கு.

கந்த: அது நடந்து ஒரு வருஷமாச்சு, அருணசலம்.

வெங்: ஒரு வருஷமான என்ன? ஆயிரம் வருஷம் ஆன என்ன? அதைக் கேட்டவங்களாலே, அதை மறக்க முடியுமா?

கந்த: இதுதானுங்க. ரெண்டு இங்கலீஷ் வார்த்தை படிச்சுப்புட்டு தலைகால் தெரியாம துள்ளுறன் பாருங்க. அவங்களை மண்டையிலே அடிச்சு உக்காத்தறதுன்ன, நமக்கு ரொம்ப குஷிங்க.

வெங்: ஒரு வார்த்தை தான எழுதத் தெரியாது. பிறத்தியார் எழுதின ஆயிரம் குத்தம் அடுக்குவாங்க.

கந்த: இந்த மாதிரி தற்குறி நம்ம வலையிலே சிக்கிச்சு.

அரு: எந்த ஊரிலே?

வெங்: அதான் மேலூர்னு சொன்னரே.

அரு: ஆமாம். மறந்துட்டேன்.

கந்த : ஆசாமி வகையா மாட்டிக்கிட்டான். பாருங்க, நம்ப சமாசாரம் அவனுக்குத் தெரியாது போலிருக்கு.

வெங் : கள்ளனுக்குள்ளே குள்ளனில்லே.

கந்த : ஆசாமியை இப்படி நிமிர்ந்து பார்த்து ஒரு முழி முழிச்சேன். உடனே அரண்டு கிட்டான்.

அரு : பின்னே என்னங்க ?

கந்த : சாலூருக்கு அனுப்பவேண்டிய சரக்கை சோலூருக்கு அனுப்பிச்சாட்டானுங்க. கம்பெனி மானம்லே போயிடுச்சு.

வெங் : அதுவும் நீங்க பக்கத்திலே இருக்கச்சே.

கந்த : விடுவிடுன்னு விட்டேன். ஆசாமி கன்னத்திலே போட்டுக்கிட்டு காலிலே விழுந்து கெஞ்சாததுதான் பாக்கிங்க. கண்ணிலே நீர் கோத்துக்கிச்சு. காலு வெட வெடன்னு ஆடுது.

அரு : என்ன ? உங்களுக்குக்குங்களா ?

வெங் : உம், பேசாம கேட்டுக்கிட்டு வாப்பா. ராமாயணம் கேட்ட கதையா, ஏதாவது திடுதிப்புன்னு கரடியை அவுத்துவிடாதே.

கந்த : ஆசாமி அள் ஆரம்பிச்சுட்டான். நமக்கு பாவமா போய்டிச்சு. ஆறு சும்மா விட்டேனு ? இது மாதிரி தப்பு மறுமுறை வந்திச்சு, மூட்டை கட்டிக்கிட்டு கம்பெனியை விட்டு கிளம்ப வேண்டியதுதான்னு அழுத்தம் திருத்தமா சொல்லிப்புட்டேன்.

அரு : நானும் கொஞ்ச ஜாக்கிரதையாவே....

கந்த : அட நீ சும்மா இரு தம்பி. ஒரு பேச்சுக்கு சொல்ல வந்தா அரண்டுக்கிறயே ?

வெங் : கந்தசாமி, அந்த ஆளு பெயரென்ன ?

கந்த : பெயரா ? அவன் பெயரை சொல்ல ஆரம்பிச்சு முடிக்கறதுக்குள்ளே விடிஞ்சு போய்டுங்க.

வெங் : சும்மா சொல்லுங்க, ப்ரதர்.

கந்த : முத்து குமாரஸ்வாமி.

வெங் : அவருக்கு உங்களைக்கண்டா சிம்ம சொப்பனம் தான்.

கந்த : சிம்ம சொப்பனமா ? சப்த நாடியும் ஒடுங்கிடும்.

மாணி : (சிரித்து) எசமான், இன்னிக்கு என்ன ரொம்ப தலை கால் தெரியாமல் இருக்கீங்களே ?

கந்த : தலைகால் தெரியாமலா ? நான் ஒண்ணும் மூடிக் கிட்டு....

மாணி : இல்லீங்க. அப்பவே கேக்கணும்னு நமக்கு ஆவ லுங்க.

வெங் : உன் ஆவலை அவுத்து விட்ருப்பா. அவுத்துவிடு.

மாணி : வெங்கிட்டு ஐயாக்கு சதா கிண்டல்தானுங்க.

கந்த : மாணிக்கம், பேச்சை மாத்திரயே ? என்னடா அதிசயமா நீ நம்மகிட்டே இன்னிக்கு கண்டுகிட்டே?

மாணி : எசமான், நீங்க போட்டுக்கிட்டு வந்திருக்கீங் களே. இது கோட்டா ? ஷர்டா ? பனியனா ? என் னன்னு புரியல்லீங்க.

அரு : ஆமாம், ஸார், நானும் கேக்கணும்னு நினைச்சுகிட் டேன்.

வெங் : மிஸ்டர், உங்களுக்கு இந்த ட்ரஸ் ரொம்ப பொருந்தியிருக்கு.

கந்த: அதுசரி, பார்வைக்கு எப்படி யிருக்கு.

மாணி: என்னங்க? அபிப்பிராயம் கேக்கறீங்களா? எச மான், உண்மையிலே வெள்ளையா சொல்லிப்பிடலா மிலே?

கந்த: எப்படி இருக்கு? அதைச்சொல்லு. மூக்கை வளைச்சுண்டு போகாதே.

மாணி: குடுகுடுப்பாண்டியைப் பார்த்து ரொம்ப நாளாச் சுங்க. நம்ப பொண்ணும் பார்க்கணும்னு சொல்லிச்சு. நாளைக்கு மறக்காம இதை போட்டுக்கிட்டு வாங்க. எம் பொண்ணை கூட்டியாறேன். அது ரொம்ப சந் தோசப்படும்.

கந்த: என்ன, வெங்கிட்டு ஸார், உண்மையிலேயே அப் படியா இருக்கு?

வெங்: மாணிக்கம் வாயிலே பொய் வருமா?

அரு: அவன் உண்மை சொல்லி இன்னிக்குத்தானுங்க கேட்டேன்.

கந்த: என்ன ஸார், படுமோசமாயிருக்கோ?

வெங்: மோசம் என்ன? உங்கமாதிரி நாலுபேர் இந்த மாதிரி கிளம்பினு, அது பாஷன் ஆய்டும்.

அரு: அதுமட்டுங்களா? ப்ரபலம் அடையறதுக்கு இது நல்ல ஷார்ட் கட், ஸார். எங்கே பார்த்தாலும் இந்த மாதிரி கிளம்பிடுவாங்க. 'கந்தசாமி ஷர்ட்'னு வாழையடி வாழையா வழங்கவும் ஆரம்பிச்சுடுவா.

கந்த: ஸார். ஒண்ணும் போறல்லே பாருங்கோ. புதுசா வாங்கறதுக்கும் கைலே பசையில்லே. இருக்கிறதை வச்சுண்டு காலம் தள்ளினுலே போறும்னு இருக்கு. நீங்களே பாருங்கோ. இருபது வருஷமா உழைச்சு இன்னும் இருபது அம்மங்காசு நம்க்கு தேரல்லீங்க.

மாணி: எசமான், கவலைப்படாதீங்க. நான் வேணும்னு தரேனுங்க. தைரியமாயிருங்க....

கந்த்: அட போடா, ஆரம்பிச்சுட்டான் தனவான் மாதிரி. நீங்களே பாருங்க. புதுத்துணி ஆம்பட்றது கஷ்டமா யிருக்கு. அப்படி அம்புட்டாலும், யானை விலை குதிரை விலையாயிருக்கு.

மாணி: அப்படி எல்லாம் செஞ்சுடாதீங்க. யானையும் குதிரையும் வாங்கிட்டா, தீனி யாராலே போட முடியும்?

வெங்: நீ சும்மா இருக்கமாட்டே, மாணிக்கம்?

கந்த: இருக்கற சட்டையும் உடம்பெல்லாம் கிழிஞ்சு போச்சு. கோட்டு கையெல்லாம் பிஞ்சு போச்சு.

வெங்: சட்டை கையை தனியா எடுத்து, கோட்டு கையிலே தெச்சுப்புட்டீர். யமப் பேர்வழி நீர்?

கந்த: ஆமாங்க. சுவர் இருந்தால்ல சித்திரம். என்னங்க நான் சொல்றது?

வெங்: புத்தி உள்ளவன் என்னிக்கும் பிழைச்சுப்பான். காலமாவது? கோலமாவது?

கந்த: ஒண்ணும் போறல்லே போறல்லேன்னாட்டா போறுங்களா? இவங்களுக்கெல்லாம் போறுதது புத்திதானுங்க.

வெங்: நன்னாச் சொன்னீங்க, நன்னாச் சொன்னீங்க.

அருணா: கந்தசாமி வாய்க்கு சக்கரை போடணும்.

மாணி: பையிலே மிட்டாயே இருக்கு! கொடுக்கட்டான்?

வெங் : உன் வாயிலே போட்டுக்கோ. ஒரு ரெண்டு நிமிஷமாவது உன் பேச்சைக் கேக்காம இருக்கலாம்.

கந்த : என்னங்க நம்ப யோசனை ?

வெங் : அற்புதம். அற்புதம்!

மாணி : எசமான், அந்த மூசுடு வந்திடுச்சு.

கந்த : நாம் ஏனுங்க பயப்படணும் ? நிதானமயிருங்க. மடியிலே கனமிருந்தாத்தானே வழியிலே பயப்படணம்.

வெங் : உமக்கென்ன ? பழைய பெருச்சாளி. அப்புறம் நம்ப பிழப்பில்லே, இழுப்புக்கு வந்தூடும்?

கந்த : இதுக்கெல்லாம் பயப்படாதீங்க, ஸார் ! அவன் எழுதினது அழியாதுங்க.

## காட்சி 2

(கந்தசாமி வீட்டில்)

செல்லம் : இதெ பாருங்க. காலையிலேர்ந்து கோவில்ச்சிலை மாதிரி உட்கார்ந்திருக்கீங்களே ? நான் அடுத்த வாரம் எப்படி அவுங்க வீட்டு விருந்துக்குப்போறது?

கந்த : சாப்பிட்டுட்டு போகவேணும். பட்டினியாத்தான்.

செல் : ஊம், அப்புறம்?

கந்த : நடந்து போகவேண்டாம். வண்டியிலே போ.

செல் : இந்த அளுத்தம் ஒருத்தருக்கும் வராதுங்க. நானும் தொண்டைத் தண்ணி வத்த அடிச்சுக்கறேன்.

கந்த: தண்ணி அம்படாட்டா சர்பத் சாப்பிடேன். என்ன குடி முழுகிப் போச்சு?

செல்: பேசத்தான் தெரியும். காரியத்திலேல்லே முறுக்கை காண்பிக்கணம்.

கந்த: செல்லம். உனக்கு என்ன தெரியும். நீ ஒரு கிணத்து தவளை. ஐயா மேஜங்கிளே உட்கார்ந்தார்ன....

செல்: இதென்ன புது வளக்கம்? ஆபீஸ்லேயும் இந்தா கொனஷ்டே பண்றீங்களா?

கந்த: அடப்பைத்தியமே! மேஜ கிளேன்ன மேஜைக்கு கிழே உட்கார்ந்து வேலே செய்யமுடியுமா? அதுக்குப் பக்காலேன்னு அர்த்தம்.

செல்: நான் சொல்ல வந்ததை விட்டுட்டேனே. என்னங்க, நீங்க இப்படி சும்மா இருக்கலாமா?

கந்த: நான சும்மாயிருக்கேன்? உசுரை கையிலே பிடிச்சுகிட்டு ஆபீஸ்லே வேலே செய்யறேன். என்னேக் கண்டு இம்புட்டு அலச்சியமாப் பேசறயே?

செல்: நீங்களே பாருங்க. அடுத்த வீட்டு லோகு ''புளியங்கொட்டை' வாங்கி இருக்கு. பார்த்தா கண்ணேப் பரிச்சுக்கிட்டு போவுது.

கந்த: அட அசடே! இது ஒரு பிரமாதமா? உனக்கு எத்தனே மூட்டை வேணும் சொல்லு. வீட்டிலே பூரா அடுக்கிப்புட்றேன்.

செல்: அடப் பாவமே! புளியங்கொட்டை புடவை யில்லே சொல்லறேன்.

கந்த : புடவையா வேணும்? செல்லம், எல்லாம் தெரிஞ்ச நீயே இப்படிப் பேசறயே? ரெண்டு வேளை கஞ்சி குடிக்கறதே இழுப்பிலே இருக்கு........

செல் : பின்னே அந்த விருந்துக்கு எப்படிப் போறது?

கந்த : போய்த்தான் ஆகணும்னு அடிதடியா? செல்லம், என் உசுரை எடுக்காதே. நம்ப ஆபீஸ்லே புது மானேஜர் வந்திருக்கார். எப்படி யிருப்பாரோ தெரி யல்லே. இந்த இருபது வருஷமா ஆபீஸ்லே நம்ப வச்சதுதான் சட்டம்.

செல் : உங்களுக்கு எப்போதும் ஆபீஸ் பெருமைதான்.

கந்த : என்ன அப்படிச் சொன்னே, செல்லம். நான் ஆபீஸ்லே வேலே பண்ணச்ச நீ எங்கே பார்த் திருக்கே?

செல் : அந்த வைபவத்தை புதுசா வந்த மனேஜரு பாக் கத்தான் போறரு.

கந்த : செல்லம், நேரமாவுது. முந்திமாதிரி நம்ப மனம் போலே ஆபிஸுக்கு போகமுடியுமா? சமையலே சீக்கிரம் பண்ணு.

செல் : பின்னே என் புடவை சமாசாரம்?

கந்த : என் உசுரை எடுக்காதே. நீ புடவை வாங்கிப் பியோ, விருந்துக்கு போகாம இருப்பியோ, எனக்குத் தெரியாது.

செல் : நான் பிறந்த வேளே. நான் என்ன சுகப்படவா பிறந்தேன்?

கந்த : இதோ பாரு, செல்லம். என்னே அடிச்சு போட்டா லும் அரைக்காசு தேறுது. நீ தான் பார்த்துகிட்டு

இருக்கியே, சட்டையில்லே கோட்டிலேன்னு நான் கஷ்டப்பட்றேனு? புத்தி யிருக்கிற மட்டும் ஒரு குறைவும் கிடையாது. நேரமாவுது, செல்லம். நம்ப ஆபீஸ்லே மானேஜர் புதுசா வந்திருக்கார். சமையலை சிக்கிரப் படுத்து. ஆபீஸுக்குப் போவணும்.

## காட்சி 3

(ஆபீஸ் அறை)

வெங்கிட்டு: ஆசாமி ரொம்ப கடுபிடி போலிருக்கே.

கந்த: நேத்திதானே வந்திருக்காரு. அதுவும் மானேஜர் பதவி முறுக்கு போக நேரம் பிடிக்குமில்லே?

வெங்: என்ன அப்படி சத்தம் போட்றுரே? பேரப்பாருங்க. குமாராம்.... நீங்க போய் பார்த்தீங்களா?

கந்த: இவங்களை யெல்லாம் போய் எவன், ஸார், பாப்பான்? கூட்டா போவேனே தவிர, பல்லை இளிச்சுண்டு இவங்க முன்னுலே எல்லாம் எவன் நிப்பான்?

மாணி: எசமான், உங்களை புது மானேஜரு கூப்பிட்ருரு.

கந்த: வந்தூடுத்தா ஸம்மன்ஸ்?

வெங்: மிஸ்டர் கந்தசாமி, கொஞ்சம் ஜாக்கிரதையாவே நடந்துக்கோங்க. எதனுச்சும்....

கந்த: இவங்க சடக்கருக்க ஸார். இவங்க மாதிரி இந்த கந்த சாமி ஆயிரம் பேரை பாத்திருப்பான்.

மாணி: எசமான், வாங்க, எம்மேலே எரிஞ்சு விளுருரு.

கந்த: ரொம்ப எரிச்சலாயிருந்தா, குழா அடியிலே போய் குளிடா போடா. எம் பிராணனை ஏண்டா வாங்கறே?

வெங்: கந்தசாமி, போங்க. அவரே இங்க வந்தூடப் போறுரு.

கந்த: சரி, இதோ பார்த்துட்டு வந்தூட்றேன்.

## காட்சி 4

குமார்: ஓ, நீங்களா?

கந்த: நீங்க முத்துகுமாரஸ்வாமி, இல்லே! ஹலோ! கன்கிராடுலேஷனஸ். கிளாட் டு மீட் யு.

குமா: மிஸ்டர் கந்தசாமி, உங்களை சும்மா அழைக்கல்லே. ம்....இந்த பைல் எல்லாம் நீங்கதானே பார்த்துவரீங்க?

கந்த: ஓ, அந்த பைல் ஆ? ஆமாம். ஆமாம்.

குமா: ஏன் ஐயா, ஒரு லக்ஷத்துக்கும் பத்து லக்ஷத்துக்கும் வித்தியாசம் தெரியல்லே? ஒரு லக்ஷம் மூட்டைகள் வேணும்னு ஆர்டர் பண்றதுக்கு, பத்து லக்ஷம் மூட்டைகள் வேணும்னு சவுடாலே எழுதி அனுப்பிச்சூட்டேளே? இந்த வேண்டாத ஒன்பது லக்ஷத்தையும் என்ன பண்றது? உமக்கு புத்தி இருந்து செஞ்சீரா?

கந்த: ஒரு ஸைபர் கூட போட்டுட்டேன் போலிருக்கு.

குமா: அப்ஸர்ட். இருபது வருஷமா வேலே செய்றாராம். நான்ஸென்ஸ். உம்மை எந்த மடையன் ஐயா வேலேக்கு வச்சுப்பான்........

கந்த: நீங்கதான்....

குமா: போம் வெளியிலே. இருபது வருஷமா வேலை செஞ்சாராம்.

சந்த்: நீங்க மேலூர்லே....

குமா: மேலூருமாச்சு, கீழூருமாச்சு? நல்ல வேளையா இப்பவே என் கண்லே பட்டது. ஒரு லக்ஷம் போரும்னு, இப்போதான் தந்தி கொடுத்தேன். இதை நான் பாக்காட்டா, நம்ப கம்பெனியே குடை சாஞ்சூடு மேய்யா ?

கந்த: இனிமே நான் ஜாக்கிரதையாயிருப்பேன். என் போறாத காலம் போலிருக்கு.

குமா: உமக்கு போறாத காலமா? கம்பெனிக்கே கிரகணம்னு தேடத் தெரிஞ்சிர்? இனிமே உஜாரா நடந்துக்கும். வரட்டு இழுப்புக்கு எல்லாம் இன்னியோடு விடுமுறை கொடுத்தூட்டு உஜாராயிரும்.

கந்த: அதைப்பத்தி கவலையே படாதீங்க. ஒரு தப்புன்னு ஒரு தப்பு பண்ணமாட்டேன்........என்ன போறாத காலம் நமக்கு!

# பிரயாணம்

## காட்சி 1

சங்கரன்: பார்வதி, அந்தப் பய எங்கே?

பார்வதி: யாரு?

சங்: அதான் பராங்குசம். இவன் தரிசனம் எனக்கு இலகுவிலே அகப்பட மாட்டேங்குதே?

பார்: அவன் ஒண்ணும் ஊர் சுத்தப் போகல்லே.

சங்: பின்னே ஆளை காலையிலேர்ந்து கண்ணிலேயே காண முடியல்லே?

பார்: நான்தான் அவனை அனுப்பி யிருக்கேன்.

சங்: எங்கே?

பார்: ரேஷன் வாங்கத்தான்.

சங்: சரிசரி, அவன் சாயந்திரமோ நாளைக் காலையி லேயோ திரும்பி வந்தவுடனே, நான் அவனை உடனே பார்க்கணும்னு சொல்லு.

பார்: ஆறிப்போறது. சாப்புடுங்க.

சங்: பார்வதி, இது என்ன காப்பியா? அல்லது....

பார்: உங்க சிநேகிதங்க படையெடுப்பு தினம் இப்படி மும்முரமாயிருந்தா, சக்கரை வீட்லே எப்படி மிஞ் சும்? எல்லா சாமான்களையும் அளந்து தராங்களே? நான் என்ன வீட்லே ஆலை வச்சிருக்கேனா?

சங் : சரிசரி, இனிமே இப்படித்தான் செய்யணும். எவனாவது காப்பிக்கு பல்லை இளிச்சுண்டு வந்து நின்னு, அவன் சக்கரை ரேஷனை வாங்கிண்டுதான் அவனுக்கு காப்பிதரணும் போலிருக்கு.

பார் : ரெண்டு நாள் சக்கரை இல்லாம காப்பிகொடுத்து பாருங்க. அப்புறம் ஈ காக்கா இங்கே அண்டுமா ?

சங் : நீ என்னையே பரீக்ஷை பண்ண ஆரம்பிச்சுட்டியே?

பார் : நீங்களும் பளகிக்கிட்டாத்தானே நல்லது! நாளைக்கு அவுங்களுக்கெதிரே பயப்படாம அலக்ஷியமா சாப்பிடலாமில்லே !

சங் : ஏது, உன் புத்திமதி கேட்டா பிழைச்சுடலாம் போலிருக்கே.

பார் : அதத்தான் நான் முதல்லேர்ந்து தலையிலே அடிச்சுகிட்டு சொல்லி கிட்டிருக்கேன். பேசாம நான் சொல்றபடி செய்வீங்களா....

சங் : பதில்கூட சொல்லாம நான் எப்படி என் சம்மதத்தைத் தெரிவிக்கிறது?

பார் : உங்க கொனஷ்டை போதும். ஒரு மாசம் லீவு எடுத்துக் கிட்டங்களே ! என்ன ஆச்சு?

சங் : இருபது நாள் ஆயி, பாக்கி பத்து நாள் மிஞ்சியிருக்கு.

பார் : உங்களை நான் கணக்கு கேக்க வறல்லே. நான் எத்தனை நாளா அடிச்சுகிட்டுவறேன்?

சங் : யாரை ?

பார் : அதுவும் வேற வேணுமா ? இதோ பாருங்க. என் தங்கச்சி அளகும் ஒரு வருசமா தன்னை வந்து பாரு, பாருன்னு கூட்டுக்கிட்டே வருது. பத்து நாளைக்கு

முந்திகூட ரொம்ப பரிதாபமா கடுதாசி எழுதியிருக்கு. அதைப்போய் பார்த்தூட்டு வந்தா என்ன ?

சங் : உன் தங்கை ஊருக்கா ? இங்கிருந்து நூறுமைலிலே இருக்குது.

பார் : நூறு மைலாயிருந்தா என்ன ? ஆயிரம் மைலா இருந்தா என்ன ? நீங்க நடந்தா போகப் போறீங்க?

சங் : பார்வதி, பிரயாணம்ங்கற வார்த்தையை எடுக்காதே, எனக்கு பத்திக்கிட்டு வறது.

பார் : நீங்க ஒருத்தர்தானா பிரயாணம் பண்றீங்க? அதிசயமா சொல்ல வறீங்களே ?

சங் : அதத்தான் நான் சொல்ல வறேன். ரெயில்லே எல்லாரும் போயிகிட்டு இருக்காங்க ; அதனாலே தான் நமக்கு இடம் இருதுங்கறேன் ?

பார் : அதுக்காக, நம்ம பிரயாணம் பண்ணவே கூடாதுங்களா ?

சங் : வீணா எதுக்கு காசையும் கொடுத்துத் தேளையும் கொட்டிக்கணம்.

பார் : நீங்க பேசுவீங்க. ஏன் பேசமாட்டீங்க ? உங்க தங்கச்சியாயிருந்தா இம்புட்டு கல்நெஞ்சு வருமா ?

சங் : புத்தியில்லாம பேசறியே ? சும்மா காரணமில்லாம சுத்தறதுக்கு காலம் இதில்லே, பார்வதி.

பார் : எங்க அம்மா இருந்தா இப்படி யெல்லாம் நடக்குமா? அளகு தாயில்லாப் பொண்ணு. என்னைக் கண்டிச்சுன்னா கொஞ்சம் ஆறுதல் அதுக்கு ஏற்படும்.

சங் : சரி, நீ என்ன சொல்றே ?

பார் : ஒரு பத்து நாளாவது, உங்க ஸ்நேகிதங்க தொல்லை

இல்லாம, ஹாய்யா தங்கச்சி வீட்டிலே போய் இருக்கலாம்.

சங் : இங்கே நம்ப வீட்டுக்குக் காவல் ?

பார் : பராங்குசம் இருக்கான்.

சங் : அப்புறம் தெய்வம்தான் துணே.

பார் : என் பேச்சை நீங்க கேப்பீங்களா? ஏழை சொல்லு அம்பலத்துக்கு ஏறுமா ?

நடராஜன் : (வந்துகொண்டே) சங்கரா ! ஏய், சங்கரா !

சங் : யாரு ? அடயாளமே புரியல்லயே.

நட : நான்தான் தம்பி.

சங் : எங்கேயோ கேட்ட குரலாத்தான் இருக்கு.

நட : என்ன சங்கரா ? இப்படி முழிச்சுப் பாக்கிறியே ?

சங் : நீங்க....

நட : நான் தாண்டா, நடராஜன்.

சங் : அடேடே ! நடராஜன் அண்ணு ? வாங்க, வாங்க. என்ன இப்படி அடியோடு மாறீட்டீங்களே !

நட : மாறீட்டேனு ? நல்லாச் சொன்னே ? உசர் தப்பினதே தம்புரான் புண்ணியம்.

சங் : என்னங்க மூஞ்சியே மாறீடுச்சே ?

நட : உனக்கு வேடிக்கையாத்தான் இருக்கு. நாற்பது மைல் வேகத்திலே ஓடச்சே, கீழே நழுவி தரையிலே உருண்டா, உருவம் மட்டுமா மாறும் ? மூளே சிதறும மிஞ்சினதே அதிசயமில்லே ?

சங் : (வேகமாய்) என்ன, அண்ணே....நாற்பது மைலிலே ஓட்றதாவது ? தரேலே உருண்டு பிரள்றதாவது ? எல்லாம் ஒண்ணும் புரியல்லீங்களே ?

நட : நீ தான் வூட்லே பொட்டிப் பாம்பு மாதிரி அடஞ்சு கிடக்கறயே? இந்து நாலு வருஷத்திலே, நீ சேந்தாப் பிலே நாலு மைல் நடந்திருப்பயா?

சங் : என்ன அப்படி ஒரே போடா போட்டுட்டீங்களே? தெருத்திண்ணைக்கும் தோட்டத்துக்கு மட்டும் நாலு முறை நடந்தாலே போதுமே.

நட : அட ஒரு பேச்சுக்குச் சொல்ல வந்தேன்.

சங் : (பதறி) என்ன அண்ணே! உங்க விரல் எங்கே?

நட : அதை யாரப்பா தேடிக்கிட்டு அலேவாங்க?

சங் : எனக்கு ஒண்ணும் புரியல்லீங்களே? கொஞ்ச விவரமா சொல்லுங்களேன்.

நட : நம்ப பிளேச்சிதே புனர் ஜன்மம் தம்பி. எல்லாம் என் போறுத காலம். நான் ஏன் மினக்கிட்டு நம்ப ஊரைவிட்டுக் கிளம்பி ரயில்லே பிரயாணம் பண்ண ணம்? அட எல்லாரும்தான் பண்றாங்களே? பொறுக்கி எடுத்தாப்பிலே நான் மட்டும் ஏன் ஓட்ற வண்டியி லேர்ந்து கீழே விழுந்து, விரல் ஒடிஞ்சு, உருவமே மாறிப்போகணும்?

சங் : உயிர் தப்பிச்சே, அதைச் சொல்லுங்க.

நட : உயிர் தப்பிச்சுது. விரல் நம்பகிட்டே எத்தனை நாளா பகையா இருந்திச்சோ! சமயம் பார்த்து நம்பளே விட்டே நகர்ந்திடுச்சு.

சங் : பிரயாணம் பண்றதுன்னு உசுரை கையிலே பிடிச்சு கிட்டு பண்ணணும் போலிருக்கே.

நட : உசுரை அடியோடு, வெறுத்தூட்டு வண்டியிலே ஏற ணும் தம்பி.

சங் : காலம் அப்படியிருக்கு அண்ணே. அனுவசிய வம்பு தானே இது? வூட்லேயே கம்முன்னு இருந்திட்டா.

நட : இருக்க விடுதா? காலச்சக்கரம் சுழல ஆரம்பிச்சா, நீயும் நானும் தனியா விலகி நீக்க முடியுமா?

சங் : என்னமோ உங்களைப் பார்த்தா எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு.

நட : பிரயாணத்திலே பட்ட அவதி போதாதுன்னு உம் மாதிரி சிநேகிதங்க வீட்டுக்கு நான் இப்போ சுற்றுப் பிரயாணம் பண்றேன்.

சங் : உங்களை ஒரு முறை பார்த்துட்டா, பிரயாணங்கற பேச்சே சிம்ம சொப்பன மாயில்லே மாறிடும்?

நட : (போய்க்கொண்டே) என்னமோப்பா, ஜாக்கிரதை யாயிரு. நான் போய் வறேன்.

சங் : ஜாக்கிரதையா போங்க. வாசப்படி தடுக்கிடப் போவுது.

நட : (தொலைவில்) அதெல்லாம் ஒண்ணுமில்லே, நான் வறேன் தம்பி.

சங் : என்ன பார்வதி! நடராஜன் அண்ணே சொன்னது காதிலே விழுந்திச்சா?

பார் : உங்களுக்கின்னு, வராங்களே ஆட்களும்!

சங் : அப்படின்னா....நீ....

பார் : அட, சொல்றவங்கதான் சொன்னாங்கன்னா, கேக் கறவங்களுக்கு புத்தியில்லே?

சங் : பார்வதி, நீ அவர் வார்த்தையை நம்பலையா?

பார் : நிஜக் கலப்பு கொஞ்சமாவது இருந்தால்லே மன சிலே கவலை உண்டாவப் போவுது?

சங் : பின்னே அவர் வார்த்தை....

பார் : பெரியபுரட்டு. அவருதான் சொல்றார்னு நீங்களும் நம்பறீங்களே ?

சங் : பார்வதி, நீ இத்தனை கெட்டிக்காரின்னு எனக்குத் தெரியாது.

பார் : இந்த பித்தலாட்டத்தை அறிஞ்சுக்க கெட்டிக்காரத் தனம் வேறு வேணுமா ?

சங் : பார்வதி, சரி, நீ என்னதான் சொல்றே ?

பார் : ஒருத்தர் வார்த்தையும் கேட்காதங்க. நான் சொல்ற படி செய்யுங்க. இன்னிக்கு சாயந்திரம் தங்கச்சி ஊருக்கு புறப்படலாம்.

சங் : உனக்கு என்ன சொன்னாலும் புத்தி வரப் போவ தில்லே.

பார் : அதென்ன உங்களுக்கு அம்பட்டு வீம்பு? நான் சொல்றேனேன்னு தானே இம்புட்டு இடும்பு பண் றீங்க.

சங் : வீம்பு இல்லே, பார்வதி. புத்திமதி.

பார் : அது எனக்கு தேவையேயில்லே. ஒரே பேச்சு. சாயந்திரம் பிரயாணத்துக்கு தயார் செய்யப் போறீங் களா ? இல்லியா ?

சங் : சரி, உன் மனம்போல செய். அப்புறம் பட்ற கஷ் டத்துக்கு நான் ஜவாப்தாரி யில்லே, ஆமாம்.

## காட்சி 2

சதாசிவம் : சங்கரா !....டேய் சங்கரா ?

சங் : புறப்பட்டதும் புறப்படாதமா என்ன அபசகுனம்?

இன்னிக்கு பிரயாணம் நம்ப பிராணனை வாங்கிடும் போல இருக்குதே.

சதா: எங்கே இப்படி ஜாலியா கிடம்பிட்டே?

சங்: நீ கேக்கணும் னுட்டுத்தான் நின்னுக்கிட்டிருந் தேன். கேட்டுட்டேயில்லே. போ, இனிமே என்ன குறை.

சதா: என்ன, தேவி சகிதமா திக்விஜயம் கிளம்பிட்டே?

சங்: பந்து கோடிகளுக்கு தரிசனம் தரவேணுமா?

சதா: அதாம்பா ரைட்டு.

சங்: நல்ல வேளை ஆமோதிச்சியே, எங்கே மறுத்துடுவை யோன்னு காப்ரா உள்ளூர இருந்தது. சரி, எங்கே நீயும் கிளம்பினே?

சதா: அதாம்பா சேலூருக்கு?

பார்: சேலூருக்குங்களா?

சதா: அந்த ஊருக்கு போகப் பிடாதுங்களா? எதனுச் சும் தடை உத்தரவு....

சங்: சே, சே, அதெல்லாம் ஒண்ணுமில்லே. போறதுக்கு வசதி அதிகமா இல்லேயேன்னு சொல்ல வறது.

சதா: அப்படி என்ன கஷ்டம் இருக்குது. வண்டியிலே ஏறினு கொண்டு போய் தள்ளிப்புட்றுன்.

சங்: உண்மையிலே வாஸ்தவங்க. கொண்டு போய் எங்கே சேக்கிறுன்?

சதா: அதெல்லாம் நாசூக்கு வேணும். இந்தக் காலத்திலே எல்லாம் பிரயாணம் பண்றது சாமான்யமில்லே. அது ஒரு கலே, சங்கரா, கலே.

சங் : அதிலே நீ ரொம்ப தேர்ச்சி ஆயிட்டேன்னு சொல்லிக்கவரே, அப்படித்தானே?

சதா : தந்திரம் ரொம்ப வேணும் தம்பி. ஒரு சமயத்திலே நெருப்புக் கோழி மாதிரி தலையை மறைச்சுக்கிடணும். மறு சமயத்திலே மாயமா மறஞ்சுடணும். எல்லாத்துக்கும் மேலே ஒண்ணு முக்கியம்.

சங் : என்ன? நம்ப காதிலேயும் போட்டுவை.

சதா : இந்த மனச்சாக்ஷின்னு ஒண்ணு இருக்குதே, அதை கட்டோடே கழட்டிப்புட்டு தனியா விலக்கி வச்சுடணும்.

சங் : அடப்பாவமே!

சதா : பாவமாவது, புண்ணியமாவது? நம்ப என்ன க்ஷேத்திராடனம் பண்றமா? கொஞ்சம் மனசு கலங்காம பக்கத்திலே இருக்கறவன் மார் மேலே நிக்கணும். அவன் சத்தம் போடுவாங்கிறயா? பூ, அவன் மூச்சு நிச்சு விட்டால்லே அந்த ஆபத்து?

சங் : ஊம், அப்புறம் சொல்லுங்கோ.

சதா : ஒண்ணுமட்டும் ரொம்ப கவனமாயிருக்கணம். பிரயாணம் முடிஞ்சவுடனே நம்பகாலு கையுங்களே மறக்காம நம்பளோடேயே எடுத்துக்கிட்டு வர சங்கோஜமே படக்கூடாது.

சங் : அப்படின்னா நீ நல்ல ஸர்வீஸ் ஆள்தான்.

பார் : நமக்கும் நல்ல துணையாச்சு.

சங் : ஆமாம் ஆமாம், ரயில்லே ஒரு அடி இடம் ஆம்புட்டாலும் அதிலே அரை அடிக்கு பங்காளியும் ஆம்புட்டாச்சு.

சதா : என்ன சங்கரா! நம்பளை அம்புட்டுக் கேவலமா நினைக்காதே!

சங் : அதெல்லாம் இல்லே, சதாசிவம். ஆனு ஒண்ணுமட்டும் செஞ்சூடாதே. என்னேயும் உன் பாதத்துக்குங் கிளே பீடமா போட்டுக்கிட்டு பிரயாணம் பண்ணீடாதே.

சதா : அட, ஒரு பேச்சுக்குச் சொல்ல வந்தா, இப்படி நடுங்கறயே.

சங் : எச்சரிக்கை கொடுத்தது நல்லதுதானே.

பார் : சரி, பேசிக்கிட்டே நின்னு ? நவருங்க.

சங் : சதாசிவம், ரயில்வே ஸ்டேஷனுக்கு பஸ்ஸிலேயே போய்டலாமே ?

சதா : எனக்கு அம்புட்டு வலுவில்லேப்பா.

சங் : வலுவா !

சதா : அதிலே போனு பாதி தூரம் போகச்சே அது பெருமூச்சு விட்டுட்டு நிக்கும். அதுக்கு மூச்சு வறதுக்கு நாம் அதை குஷி பண்ணி தள்ளணும். போறும் போறும், சங்கடத்தை விலக்கி வாங்கினுப்லேதான்.

சங் : சரி, ஒரு ஜட்கா வண்டியைப் பிடி.

சதா : அதான் ரைட்டு.

## காட்சி 3

(ரயிலடியை அடைந்து விடுகிருர்கள். கூட்டத்தின் நெருக்கடி)

சங் : (பதறி) பார்வதி ! பார்வதி ! பாத்தியா ? எனக்கு இப்பவே குலே நடுங்குது. நான் சொல்றதைக் கேளு. பேசாம வீடு திரும்பிடலாம்.

பார் : இம்புட்டு கோழையாயிருந்தா உங்களாலே என்ன ஆகும்? அவரைப் பாருங்க. எம்புட்டு தைரியமா கூட்டத்திலே பாஞ்சு போறாரு.

சங் : கூட்டத்திலே பாஞ்சா போறான்? எத்தனை தலைகள் மேலே நடந்து போறான் கிராதகன். இரக்கம் கொஞ்ச மாவது இருந்தா இந்த கும்பல்லே இறங்கிப் போவானா?

பார் : நீங்க மட்டுமா போறீங்க? ஆயிரத்திலே நீங்க ஒண்ணு.

சதா : (தொலையிலிருந்து) சங்கரா....டேய் சங்கரா!

பார் : ஆம்பளையாம் ஆம்பளை. அவர் எம்புட்டு தைரியமா போறாரு. அவர் பின்னாலே போக துப்பு இல்லியே.

சங் : (உரக்க) சதாசிவம்! சதாசிவம்! என்னாலே ஒரு அடியும் முன்னேற முடியல்லே. பின் வாங்கவும் முடியல்லே.

சதா : (உரக்க) அப்பவே கையைப் பிடிச்சுக்கோடான்னு கெஞ்சினேன், கேட்டியா? சரி. அங்கேயே நில்லு. இதோ வந்துட்டேன்.

சங் : பார்வதி! பயமில்லே. அவனே இங்க வறான்.

பார் : எம்புட்டு நாள்தான் இப்படி பச்சக்குளந்தையா இருப்பீங்களோ! ஒரு சாமர்த்தியம்னா ஒரு சாமர்த் தியமில்லே. அடே, ஒரு விதத்திலேயாவது இருக்கப் படாதா?

சங் : காசைக்கொடுத்துத் தேளைக்கொட்டிக்கிறது சாமர்த் தியமா? சரி, உன்னோடே சண்டை போட்டுகிட்டா, எல்லாரும் சிரிக்க ஆரம்பிச் சூடுவாங்க.

பார் : சிரிக்க ஆரம்பிக்கணுமா ? அதான் எல்லாரும்தான் சிரிக்கறுங்களே ? என் மானமில்லே போவுது. உங்களுக்கென்ன ?

சதா : அடே பழி ! இப்படி முட்டுக்கட்டை போட்டாப்பிலே நின்னுட்டயே? எத்தனை சிரமப்பட்டு மூணு டிக்கட்டு வாங்கி வந்தேன். அத பயன் படுத்திக்க காலம் வராது போலிருக்கே.

பார் : எல்லாம் உங்க சாமர்த்தியத்திலே தானுங்க இருக்கு.

சதா : நீங்க பயப்படாதங்க அம்மா. சேலூர் போய் சேராட்டா, எம்பேரு சதாசிவம் இல்லீங்க.

சங் : உன் பெயரை மாத்திக்கறது இருக்கட்டும்பா. முதல்லே வண்டி வந்தூடப் போவுது, இந்த கும்பலே நீஞ்சி அக்கரை சேரத்துக்குள்ளே.

சதா : சும்மா கவலைப்படாதே, தம்பி. அனுமார் லங்கைக்கே தாவிக்கிட்டு போகல்லயா ? இது ஒரு பிரமாதமா ?

பார் : இவருக்கு ஒரு ஏரோப்ளேன் கொண்டாருங்க. அய்யா அதிலே ஜம்னு சவாரி பண்ணீட்டுப் போவாரு.

சதா : அடே ! என் தோளை கெட்டியா பிடிச்சுக்கோடா ! அரை நிமிஷத்திலே கொண்டுபோய் உன்னை அங்கே சேர்த்துப்புட்றேன்.

சங் : கடவுள்தான் எனக்குத் துணை போ.

பார் : ஐயோ ! வண்டியே வந்திடுச்சே !

(ரயில் வந்து நிற்கிறது)

சதா : சங்கரா ! ஜல்தி ! மலைச்சு நிக்கிறியே. இது ஸ்வாமி தரிசனமில்லே.

பார்: ஏறுங்கோ, சீக்கிரம், நின்னு என்னபண்றது? நம்பளுக்காக வண்டி நிக்குமா?

சதா: ஊம், ஏறேண்டா.

சங்: ஒரு அங்குலம் இடைவெளி தெரியல்லயே?

அகோரம்: யாரைய்யாயிது! மாடுமாதிரி வந்து விளறே!

சதா: சும்மா நிறுத்தய்யா! ஏதோ பட்டாதார் மாதிரி யில்லே பேசறே.

அகா: ஏய்! மரியாதையாப் பேசு! உன் கைவரிசை இங்கே செல்லாது.

சதா: நம்முது எல்லாம் கால்வரிசைதாங்க.

அகோ: மரியாதையா வெளியிலே போறயா? இல்லாட்டா!

சதா: ரொம்ப மரியாதையாய் உள்ளே என்னே கூட்டேபாரு.

அகோ: டேய்! இறங்கறியா! அல்லது கழுத்தைப் பிடிச்சு வெளியிலே தள்ளட்டுமா?

சதா: ஏண்டா! அத்தனை தைரியமா உனக்கு! ஹூம்! அத்தனை தைரியமா!

அகோ: ஐயோ என்னைக் கொல்றானே!

பார்: வேணாங்க விட்டுடுங்க. நம்ப திரும்பிடலாம்.

சதா: நீங்க என்னம்மா இது! ஜல்தி ஏறுங்க.

பார்: இத்தனை கஷ்டம்னு தெரியாது.

சதா: கஷ்டமா! கஷ்டமே ஆரம்பிக்கல்லே!

அகோ: டேய்! என்னை கீளேயா தள்ளினே!

சதா: சரி, மேலே தள்ளச் சொல்றயா? இதோ தள்றேன்.

அகோ: அடேடே! என்னை விட்டுடு, விட்டுடு.

சதா: (அதட்டி) பேச்சு காண்பிக்கமாட்டியே?

அகோ: மூச்சே காண்பிக்கமாட்டேன்.

பார்: என்னை நெருக்கறுங்களே?

அகோ: கொஞ்சம் பொறுத்துக்கோங்க. வண்டி 'மூவாச் சுன்னு' இத்தனை சங்கடமில்லே. (ரயில் புறப்படுகிறது)

பார்: அவரு எங்கே?

சதா: அடேடே! சங்கரன் எங்கே?

பார்: என்னைக் கேக்கறீங்களே?

சதா: இத்தனை பெரிய மடையனு யிருக்கானே?

பார்: உங்களுக்கு இப்பத்தான் தெரியும். நான் பட்ற கஷ்டம்............

சதா: இப்போ இந்த கஷ்டம் எனக்கு மில்லே வந்திடுச்சு. என்ன போறுத காலம் நமக்கும்.

பார்: நான் இறங்கிட்றேன். வந்தவேளை சரியாயில்லே. புறப்படச்சேயே அவரு அஸ்துகொட்டினுரு.

சதா: அம்மா, நான் கொஞ்சம் யோசிக்க நேரம் கொடுங்க.

பார்: என்னுலே அவரில்லாம இந்த வண்டியிலே ஒரு நிமிஷம் நிக்கமுடியாது,

அகோ: நிக்க முடியாட்டி உக்காருங்க அம்மா.

பார்: ஏஞ்ய்யா! சும்மாயிருக்க முடியல்லயோ!

அகோ: நான் சும்மாயிருந்தா ஆபத்தால்லா போய்டும்.

சதா: கடவுளே! இதுக்கு என்ன செய்றது! எனக்கு ஒண்ணும் புரியல்லயே?

பார்: அவரைவிட்டு நான் இதுவரை ஒரு நிமிசம் பிரிஞ்சதில்லே.

சதா: அம்மா! இது நம்பளா தேடிகிட்ட ஆபத்தா? சங்கரன் ரொம்ப கெட்டிக்காரன். அசகாயசூரங்க. எங்கேயும் போகமாட்டானுங்க. எங்கனாச்சும் பதுங்கிக்கிட்டு இருப்பான்.

பார்: இதோ பாருங்க, வண்டியை நிறுத்தப் போறீங்களா? அல்லது நான் கீளே குதிக்கட்டான்?

சதா: அட கஷ்டகாலமே! நான் வந்து மாட்டிக்கிட்டேன். களட்டிகிட்டு நளுவ முடியாது போலிருக்கே.

பார்: ஒரே பேச்சு! என்ன சொல்றீங்க?

அகோ: அம்மா! அவரு சொல்றுரே, காதிலே விளல்லே? புருசன் சொன்னு இந்த காலத்து பொண்ணுங்க கேட்டாத்தானே?

பார்: (கோபமாய்) என்ன சொன்னீங்க! என்ன சொன்னீங்க! உங்களுக்கு அம்புட்டுத் தைரியமா! அவரு வரட்டும் சொல்றேன்.

சதா: நீ ஏஞ்யா கரடி விடறே? நமக்கு ஒரு துன்பம் போதாதுன்னு சமயம் பார்த்து ஆரம்பிக்கிறுன் இந்த ஆளும்.

அகோ: பின்ன என்னங்க?

சதா: நீ பேசாம இருப்பியா! அந்த அம்மா எஜமானன்....

அகோ: ஓகோ, அப்படீங்களா!

பார் : என்னங்க? உங்களுக்கு என் சங்கடம் வேடிக்கையா யிருக்கா? அவரை இன்னும் ஒரு நிமிசத்திலே காணல்லே!............

சதா : அம்மா! உங்களுக்கு கோடி புண்ணியமுண்டு. அடுத்த ஸ்டேஷன்லே வண்டி நின்னதும் நிக்காததும் என் துப்பறியும் வேலையை ஆரம்பிக்கறேன். சல்லடை போட்டு தேடிக்கொண்டு வந்துட்றேன்.

அகோ : (சிரித்து) ஏனய்யா! துப்பு இருந்துதான் பேசறியா? நீ நிக்கிற இடத்துக்கே இளுப்பா இருக்கு! இவரு இதை விட்டுட்டு, வேற ஆளைத்தேட புறப்பட்டாராம்.

சதா : வாயை மூடுய்யா! எதுக்கும் ஸம்மன்ஸ் இல்லாம ஆஜர் ஆயிட்றான். தொணதொணப்பு!

அகோ : அய்யாபாடு இளுப்பிலே வந்தால்லே தெரியும்.

பார் : என்னாலே முடியாதுங்க. கண்டிப்பா சொல்லிட்டேன். அவரை கொண்டு வரீங்களா?........

சதா : நான் என்னம்மா செய்வேன்?

பார் : நாங்கதான் வீடு திரும்பினோமே. எங்களை ஏன் இளுத்துக்கிட்டு வந்தீங்க?

சதா : எல்லாம் என் கால பலன். நாமா தேடிக்கிட்ட வம்புதானே. நல்ல பரோபகாரம் இது.

பார் : என்னாலே முடியாது! நான் கீழே குதிச்சுட்றேன்.

சதா : அம்மா! நில்லுங்க.

அகோ : என்ன அய்யா அறிவில்லாத ஆளாயிருக்கே. பாத்துகிட்டு நிக்கிறயே.

பார் : முடியாது, இதோ குதிக்கறேன்.

சதா : வேணாம்! வேணாம்! வேணாம்! ஆபத்து, ஆபத்து.

அகோ : வேண்டாங்க. வேண்டாங்க.

பார் : மாட்டேன், நான் கீழே குதிக்கத்தான் போறேன்.

சங் : (தொலையிலிருந்து முணகிக்கொண்டே) பார்வதி.... பார்வதி........

சதா : இது என்ன அசரீரியா ?

பார் : என்னங்க! உங்க காதிலே விழுந்ததா ?

சதா : கவனிச்சிக் கேளுங்க, கவனிச்சுக் கேளுங்க.

சங் : (மெதுவாய்) பார்வதி!....நான்தான்....சங்கரன.

பார் : அவருதான்! அவருதான்!

சதா : இந்தக் குரல் எங்கிருந்து கேக்குது தெரியல்லியே?

பார் : அதோ கீழே ஏதோ அசையுதே.

சதா : எங்கே, சொல்லுங்களேன்.

பார் : உங்க காலுங்கீழேதான்.

சதா : அடக் கடவுளே! இந்தப் பாவியா என் காலடியிலே சரணாகதியாக் கிடக்கறான். இந்நேரமா ஏதோ படுக் கேன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன்.

சங் : சதாசிவம்! கொஞ்ச நேரமாவது கீழே இறங்கேன். இத்தனை நேரம் த்வம்ஸம் பண்ணினது போதுமே.

அகோ : அடக் கஷ்டமே! ஏஞ்ய்யா! ஆள் தெரியாம நிக்கி றீங்களே!

சதா : அப்பா எழுந்திரு! மெள்ள ! மெள்ள ! இப்ப மூச்சு விடு. ஹூம்....அப்படித்தான். சங்கர்! என்னை மன்னிச் சுடு.

பார் : நல்லவேளை. உயிரோடே எழுந்தாங்களே.

சதா : ஏண்டா சங்கர், கத்தக்கூடாது ?

சங்: (நிதானமாய்) கத்தரத்துக்கு எனக்கு நீ சக்தி, வச்சிருந்தயா! அதான் கடோர்கஜன் மாதிரி முதுகு மேலே தாண்டவம் ஆட்றயே. இப்போதானே எனக்கு ப்ரக்ஞை வந்தது.

சதா: உனக்கும் உசுர் வந்தது. எனக்கும் வந்ததுப்பா.

சங்: உனக்கென்ன கேடு?

சதா: அப்பா! என்னை ஒண்ணும் கேக்காதே. எல்லாம் உன் தேவியின் திருவிளையாடல்தான்.

பார்: போறும்! போறும்! இந்தப் பிரயாணம் ஏழு ஜன்மத்துக்கும் போதும்.

சதா: பிரயாணமா! இன்னம் ஆரம்ப கட்டத்திலேயே தான் இருக்கோம்.

சங்: அடக் கடவுளே!

## காட்சி 4

பார்: அப்பாடா! ஒரு கண்டம் பிழைச்சோம்.

சங்: கண்டமா? புனர் ஜன்மம்னு சொல்லு.

பார்: அவர் துணையில்லாட்டி ரொம்ப துன்பப்பட்டிருப்போம்.

சங்: போறும். போறும். என் முதுகுவலி இன்னும் ஒரு மாசத்துக்கு போகாது.

பார்: உங்களை யார் அவர் திருவடி சரணத்தை தேடச் சொன்னாங்க?

ங்: இந்த மாதிரி அனுபவங்கள் சாமான்யமா வருமா? கொடுத்துவச்சிருக்கவேணும்?

பார் : பேசாம இருங்க. வெளியிலே சொன்னா வெக்கக் கேடு. ஊமை கனவு கண்டாப்பிலே கம்முன்னு இருங்க.

சங் : உன் தங்கச்சி வீடும் வந்திருச்சே.

பார் : என்ன வூட்லேர்ந்து சத்தமே காணோமே. எங்கனாச்சும் போயிருப்பாங்களா ?

சங் : பார்வதி ! ஏதாவது சொல்லி இருக்கற உசுரையும் போக்கடிக்காதே.

பார் : சரி. வண்டிலேர்ந்து இறங்குங்க.

சங் : இந்தாப்பா ஒரு ரூபாய்........என்ன பார்வதி, வூட்டு வாசலிலே யாரோ பெரியவரில்லே உட்கார்ந்திருக்காரு ?

பார் : பேசாம வாங்க.

பெரி : (இருமல்)

பார் : ஏங்க? இந்த வூட்லேதானே அளகு இருக்கு?

பெரிய : வூடு கட்டச்சேயே ரொம்ப யோசிச்சுதான் பிளான் பண்ணேன். அளகாயிருக்கத்தானே இம்புட்டு செலவழிச்சு வூட்டை கட்றது.

பார் : அதுக்கில்லீங்க....இந்த வூட்லே அளகுன்னு ஒரு பொண்ணு குடியில்லே?

பெரிய : ஆமாம். இருந்திச்சு.

பார் : என்னங்க, இருந்திச்சா !

பெரி : இரண்டு வருசமா இருந்திச்சு.

பார் : இப்போ! அவுக........

பெரி: ஏதோ அது புருசனுக்கு வேறு எந்த ஊருக்கோ திடுதிப்புன்னு மார்த்தலாய்டுச்சு.

பார் : அட கஷ்டகாலமே!

பெரி : நேத்துதான் வூட்டை காலிப்பண்ணிட்டுப் போறாங்க. ரொம்ப தங்கமான பொண்ணு அது.

பார் : என்ன போறாதகாலம்! ரயில்லே இடிபட்டுண்டு, உசுரை எப்படியோ காப்பாத்தி கொண்டு வந்தூட்டோம். இங்கியோ....

சங் : நான்தான் அப்பவே சொன்னேனே. வேண்டாம், காலம் சரியாயில்லேன்னு அடிச்சு கிட்டேன். கேட்டியா?

பார் : சரி, இப்போ என்ன பண்றது? ஊர் திரும்ப வேண்டியதுதான்.

சங் : என்ன? திரும்ப ரயில் பிரயாணமா? பார்வதி; முடியாது. என்னாலே முடியவே முடியாது. நடந்தாவது ஊருக்கு திரும்புவேனே ஒழிய, அதன் மூஞ்சியிலேயே முழிக்க மாட்டேன்.

பார் : அப்புறம் இங்கே எங்கே தங்கறது? வேறு வழி ஏது? திரும்புங்க ரயிலடிக்கு.

சங் : என்ன போறாதகாலம்டா இது!

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

# "பேசும் படம்"

தென்னாட்டின் தலைசிறந்த சினிமாப் பத்திரிகை

மாத வெளியீடு

*

தனிப்பிரதி அணா 8

வருஷசந்தா - ரூ. 6

உங்களூர் ஏஜண்டிடம் கிடைக்காவிடில்
சந்தாதாரராய்ச் சேருங்கள்

*

## "பேசும் படம்" காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை 14